தப்பு செய்தவர் திருந்தியாகனும் தவறு செய்தவர் வருந்தியாகனும்

# லட்சியம்

அரசியல்-சமூக விழிப்புணர்வு மாத இதழ்

வெல்லும்

மலர் : 10 இதழ் : 6 | டிசம்பர் – 2024 | விலை ரூ. 20/-



## மதுரையில் பூகம்பத்தை கிளப்பும் வேதாந்தா...?

புராதன சின்னங்கள் அழியும் அபாயம்?

## கோயில் நிலம் ஆக்கிரமிப்பு... மீட்க போராடும் கிராம மக்கள்...

மெத்தனம் காட்டும் அதிகாரிகள்!



உள்ளாட்சி தேர்தல்

## நடக்குமா நடக்காதா

## ஸ்ரீ அழகர் சித்தர் கோயிலில் அடாவடி வசூல்...





கோடிக்கணக்கில் சுருட்டும் சரவணன்?



# பொட்டல்புதூர் ஊராட்சி



## கடையம் ஊராட்சி ஒன்றியம், தென்காசி மாவட்டம்.

## வளர்ச்சி திட்ட பணிகள்



**AGMT**

1. பொட்டல்தூர் மெயின் ரோட்டில் அங்கண்வாடி அமைத்தல் – ரூ. 12.61 லட்சம்
2. பொட்டல்தூர் மெயின் ரோட்டில் துணை சுகாதார நிலையம் அமைத்தல் – ரூ. 30 லட்சம்
3. பொட்டல்தூரில் மேல பஸ்ஸ்டாப்-ல் உயர்மின் விளக்கு (High mass) அமைத்தல் – ரூ. 10 லட்சம்

4) முத்தூர் தெருவில் இரண்டு பாலம் அமைத்தல் – ரூ. 18 லட்சம்

5) புதுத்தெருவில் வாறுகால் 15வது நிதிக்குழுவில் அமைத்தல் – ரூ. 8.29 லட்சம்

6) நமச்சிவாயபுரத்தில் பாலம் அமைத்தல் (MGNREGS) – ரூ. 6.55 லட்சம்

7) முத்தன் தெருவில் போர் பிளாக் அமைத்தல் – ரூ. 26 லட்சம்

8) பொட்டல்புதூர் ஊராட்சி – பொட்டல்புதூர், ஆனந்தபுரம், நெல்கட்டும் பாறை, முத்தன் தெரு சீனியாபுரம் பிஸ்மிநகர், பக்கிரிமுப்பன் குடியிருப்பு, வாங்காபுலியூர் ஆகிய ஊர்களில் 15வது நிதிக்குழுவில் வீடுகளுக்கு குடிநிர் இணைப்பு மற்றும் பைப்லைன் விஸ்தரிப்பு தொகை – ரூ. 54.45 லட்சம்

9) புதுத்தெரு to வெங்கடாம்பட்டி இணைப்பு தார் சாலை அமைத்தல் – ரூ. 10.58 கோடி

10) பொட்டல்புதூர் MGNREGS திட்டத்தில் பண்ணை குட்டை அமைத்தல் – ரூ. 29 லட்சம்

11) புதுத்தெரு சமுதாய நலக்கட்டிடம் பராமரிப்பு தொகை – ரூ. 6.15 லட்சம்

12) பொட்டல்புதூர் MTP மரக்கன்று நடுதல் 4.80 (MGNREGS)

**மொத்தம் – ரூ. 555.85 லட்சம்**



திரு. A.**கணேசன்** B.A.,
**தலைவர்**

திரு. K.**முகம்மது முகைதீன் A1 துரை**
**துணைத் தலைவர்**



ஊராட்சி செயலர் : திரு. S.**ஜெயசிங்ராஜன்**

**வார்டு உறுப்பினர்கள்:** P.அரவிந்த்ராஜ், S.பிரியா, K.துரைச்சி, S.முகம்மது அபுபக்கர் சித்திக், வி.விஸ்வசேக் உதுமான், A.ஹமீதாபானு, M.முகைதீன் பாத்திமா, S.ஹமிதான்பானு, M.மைதீன்பிச்சை, S.சொர்ணலதா, S.கோமதி.

# லட்சியம் வெல்லும்

அரசியல்-சமூக விழிப்புணர்வு மாத இதழ்

மலர் 10 | இதழ் 8 | டிசம்பர் - 2024



ஆசிரியர்-வெளியீட்டாளர்
சு.சதாசிவம் M.A., B.Ed., M.Phil.,

நிர்வாக ஆசிரியர்: M.மணிகண்டன்

இணை ஆசிரியர்: P.சுரேஷ் ஆப்ரகாம்

உதவி ஆசிரியர்: S.சின்னதுரை

துணை ஆசிரியர்: A.சிவக்குமார்

செய்தி ஆசிரியர்: A.ஹாசன்

தலைமை செய்தியாளர்: D.முத்துக்குமார்

சிறப்பு செய்தியாளர்: G.சேதுராமன்

நிருபர்கள்:
V.ரவிச்சந்திரன், J.ரவி, S.ஓம்வசி, சிவா (எ) கென்னடி, K.சதிஷ்குமார், S.ராம்குமார், A.மகேஸ்குமார், K.செந்தில்குமார், S.விக்னேஸ், S.சண்முகராஜா, M.கிஷோர்குமார், பாலாஜி தியாகராஜன், காசி லிங்கம், V.முத்தீஸ்வரன், T.ரவிச்சந்திரன், S.உக்கிரமபாண்டியன், G.Eye God தமிழரசு, M.R.ஆனந்தன், N.ராஜாலிங்கம், G.வெற்றிவேல்

கௌரவ ஆலோசகர்கள்:
பொ.ஜெயபாலன், A.ஐசக் அருள்ராஜ்

ஆலோசகர்கள்:
S.முகமது ஜியாவுதீன், மகேந்திரன், P.மாரிமுத்து, A.A.S.விக்டர்,

தலைமை சட்ட ஆலோசகர்கள்:
வழக்கறிஞர் R.சரவணன், M.L., உயர்நீதிமன்றம், சென்னை
மூத்த வழக்கறிஞர் J.மதியழகன், B.A., B.L.,

சட்ட ஆலோசகர்கள்:
வழக்கறிஞர் S.ஷேக்ஸ்பியர், M.L.,
வழக்கறிஞர் K.சுப்பையா, B.A., B.L.,

சர்குலேஷன்: பிரபு கிளமெண்ட்



லட்சியம் வெல்லும்
முகவரி: எண்:2/48 சி, சம்பூர்தி காம்ப்ளக்ஸ் , 2-வது தளம் , பொன்னகர் , திருச்சி - 620 001.
Cell: 94438-52805, 99434-83046
E Mail : latchiyamvellum@gmail.com



லட்சியம் வெல்லும் மாத இதழில் வெளியாகும் கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவர்களின் சொந்த கருத்துக்களே நிர்வாகத்தின் கருத்தல்ல.லட்சியம் வெல்லும் இதழில் வெளியாகும் விளம்பரங்களின் வாசகங்களுக்கும், அதன் நம்பகத் தன்மைக்கும் நிர்வாகம் எந்த வகையிலும் பொறுப்பேற்காது. பத்திரிகை தொடர்பான எல்லா வழக்குகளும் திருச்சி நீதிமன்ற எல்லைக்குட்பட்டது.


## தலையங்கம்

# நீதிமன்றங்கள் ஜாமீன் அளித்த 7 நாட்களுக்குள் சிறையில் இருந்து விடுதலை செய்ய வேண்டும்

### – ஐகோர்ட் உத்தரவு

ஜாமீன் வழங்கிய 7 நாட்களில் கைதிகள் சிறையில் இருந்து விடுதலையாவதை உறுதி செய்ய வேண்டும் என்று தெரிவித்த நீதிபதிகள், அதற்கு தேவையான நடவடிக்கைகளை சட்டப் பணிகள் ஆணைக்குழு எடுக்க வேண்டும் என அறிவுறுத்தினர்.

மேலும், தமிழ்நாடு முழுவதும் 800க்கும் மேற்பட்ட கைதிகள், ஜாமீன் கிடைத்தும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாக பத்திரிகை செய்தியில் கூறப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டிய நீதிபதிகள், கைதிகளின் எண்ணிக்கை குறித்த விவரங்களை, மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு மூலம் சேகரித்து அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் எனவும் அவர்களை விடுதலை செய்ய என்ன நடவடிக்கைகளை எடுக்கலாம் என்பது குறித்தும் அறிக்கை தாக்கல் செய்ய சென்னை உயர் நீதிமன்ற தலைமைப் பதிவாளருக்கும், தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணைக்குழு உறுப்பினர் செயலருக்கும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

உள்ளபடியே சிறப்பான தீர்பாகவே பார்க்கப்படுகிறது. காவல்துறை ஒரு வழக்கு தொடர்பாக கைது செய்யும் ஒருவரை நீதிமன்றம் மூலம் சிறைக்கு அனுப்பி வைக்கின்றனர். அவர் குற்றவாளியா அல்லது குற்றமற்றவரா என்பது விசாரணைக்கு பின்பு தான் தெரியவரும் அதுவரையிலும் சிறக்குள் இருக்க தேவையில்லை குற்றத்தை பொறுத்து ஜாமின் வழங்கலாம் என உத்தரவு இருந்தும் அது கடைபிக்க படாமல் இருந்து வந்தது.

இது தொடர்பாக நீதி அரசர்கள் வழங்கிய தீர்ப்பு வரவேற்கத்தக்க ஒன்றாகவே பார்க்கப்படுகிறது.

– ஆசிரியர்



# ஸ்ரீ அழகர் சித்தர் கோயிலில் அடாவடி வசூல்...

## கோடிக்கணக்கில் சுருட்டும் சரவணன்?

## நடவடிக்கை எடுக்குமா அறநிலையத்துறை?

சிலை வைத்தால் தீராத பிரச்சனையும் தீரும் என்ற நம்பிக்கையுடன் பக்தர்களால் வழிபட்டு வரும் கோயில்தான் தென்னம்பாக்கம் ஸ்ரீ அழகர் சித்தர் கோயில்.

கடலூர் மாவட்டத்தை சேர்ந்த கோயில் என்றாலும் புதுச்சேரியில் இருந்து சுமார் 16 கிலோமீட்டர் தொலைவில் கோயில்அமைந்துள்ளது.

இந்த அழகர் சித்தர் கோயிலில் பல்வேறு முறைகேடுகள் அரங்கேறி வருவதாகவும், இதனால் பல கோடிகள் அரசுக்கு தெரியாமல் மறைக்கப்படுவதாகவும் புகார் வந்ததை தொடர்ந்து விசாரணையில் இறங்கினோம்...



E.O ரமேஷ் பாபு

சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்னர் இந்த கிராமத்திற்கு வந்த அழகர் சித்தர் அப்பகுதி மக்களுக்கு ஏற்பட்ட நோய்களை குணமாக்கி பல்வேறு விசித்திரங்களை அருளியிருக்கிறார். பின்பு இந்த ஊரிலேயே தங்கி அருள் பாலித்து,சமாதியாகியும் விட்டார். அதே இடத்தில் அவரது பக்தர்கள் கோவில் கட்டி வழிபட்டு வருகின்றனர்.

காலம் காலமாக ஸ்ரீ அழகர் சித்தருக்கு வழிபாடுகள் நடத்தப்பட்டு வருகிறது. இங்கு மண் சிலைகள் செய்து வைத்து வழிபட்டால் பிரச்சனைகள் தீர்ந்துவிடும் என்பது நம்பிக்கை. அதேபோல் வேண்டுதல்கள் நிறைவேறினால் பக்தர்கள் காணிக்கையாக தங்களுடைய வேண்டுதலுக்கு ஏற்றவாறு மண் பொம்மைகளை செய்து, அந்த கோவிலில் வைத்து வழிபடுவது வழக்கமாக உள்ளது.

தமிழகம் முழுவதும் உள்ள பக்தர்கள் ஏராளமானோர் வந்து தங்கி வழிபட்டு வருகின்றனர். இதனால் இந்த கோயிலுக்கு வருவாயும் அதிகமாக வந்து கொண்டிருக்கிறது. இந்த கோயில் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் வருகிறது இருந்தும், இந்த ஆலயம் தொடர்பான வரவு செலவுகளை முறையாக கணக்கு காட்டப்பட வில்லை என்றும் பல்வேறு கோல்மால்கள் செய்து வருவதாகவும் கணக்கர் சரவணன் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளது.


இவர் 1998 ஆம் ஆண்டு இந்த கோவிலில் பணியமர்த்தப்பட்டுள்ளார். இன்று வரை ஒரு தனி ராஜாங்கமே இந்த கோயிலை வைத்து நடத்தி வருகிறாராம். அதன் மூலம் பல கோடிகளை சுருட்டி வருவதாகவும் கூறப்படுகிறது.

பிரார்த்தனைக்கு சிமெண்ட் சிலை வைப்பது, கடைகள் ஏலம் விடுவது, கோழி,ஆடு, மாடு, தோப்பு ஏலம் விடுவது போன்றவைகளில் தலையிட்டு அரசுக்கு தெரியாமல் பல முறைகேடுகளை செய்து வருவதாக பக்தர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

கோவிலில் கடை வைத்திருப்பவர்கள் மற்றும் உபயதாரர்கள் இணைந்து இவர் மீது

உயர் அதிகாரிகளிடம் முறையிட்டு புகார் அளித்தால், இவரது அதிகார பலம், அரசியல் பலத்தை வைத்து மிரட்டியும் அடியாட்களை வைத்து ஆலய பகுதிகளில் உள்ள கடைகளை கொளுத்தி விடுவாராம்.

மேலும் இதனை பயமுறுத்துவதோடு நிறுத்தி காவல்துறை நடவடிக்கை எடுக்காமல் பார்த்துக் கொள்வாராம். அதேபோல் ஒருமுறை பாரம்பரிய பழமை மிக்க உண்டியலை மாற்றி புதிய உண்டியலை இவரே வைத்துவிட்டாராம். பழைய உண்டியல் பணத்தை தன்னுடைய கைக்கூலிகளை வைத்து கையாடல் செய்து விட்டாராம். இந்த திருட்டையும் காவல் நிலையத்தில் புகார் செய்ய முற்பட்ட போது அதனையும் தன்னுடைய காசால் கனகச்சிதமாக முடித்து விட்டாராம்.



அமைச்சர் சேகர் பாபு

இது மட்டுமின்றி சிலை வைத்து வழிபாடு செய்ய வரும் பக்தர்களிடம் ஆளுக்கு ஏற்ப மாடி வீடு பொம்மை வைக்க ரூபாய் 3000, கப்பல்,விமானம் வைக்க 2000 ரூபாய், கை,கால், சிலை வைக்க 2000 முதல் 2500 வரை வசூலிக்கப்படுகிறதாம்.

சிலைகள் வைக்க தனி நபரை நியமித்து அவர்களை அரசு ஆவணத்தில் கணக்கு பக்கத்தில் சேர்த்து ஊழியர்களுக்கு ஊதியம் வழங்கப்படுகிறதாம்.

இத்த திருக்கோயில் சுமார் 50 நபர்கள் பணியாற்றி வருகின்றனர் அவர்களிடமும் சம்பளத்தில் கமிஷன் கொடுக்க வேண்டும் என மிரட்டி வருவதாகவும் கூறப்படுகிறது. அவரின் அனைத்து செயல்பாடுகளுக்கும் EO ரமேஷ் பாபு கிரீன் சிக்னல் கொடுப்பதாகவே கூறப்படுகிறது.

ஆலயத்தில் முகூர்த்த நாட்களில் நடைபெறும் திருமணங்களில் முறையாக மணமகன் மணமகளின் ஆவணங்களை ஆய்வு செய்து பதிவு செய்வதும் இல்லையாம். அதற்கு அதிகாரிகளும் வருவதில்லையாம்.

இதனால் தவறான வகையில் குழந்தை திருமணங்கள் நடைபெற்றும் வருகிறதாம்.

மேற்படி திருமணங்கள் ஆய்வு செய்யப்படாததால் அரசிற்கு வருவாய் இழப்பு ஏற்படுத்துவதுடன், குழந்தை திருமணங்களால் அரசுக்கு கெட்ட பெயரும் ஏற்பட்டு வருகிறதாம்.



மணல் மற்றும் செம்மண் அடிப்பதற்காக வேண்டிக்கொண்ட பக்தர்கள் பிரார்த்தனை நிறைவேறிய பின்பு மண் அடிக்க வரும்போது அவர்களிடம் பணத்தைப் பெற்றுக் கொண்டு குறைந்த விலையில் தொழில்சாலை கழிவுகளைக் கொட்டி கணக்கை நேர் செய்து கொள்கின்றனராம்.

இதனால் பக்தர்களுக்கு தொற்று நோய் ஏற்பட்டு அங்கப்பிரார்த்தனை செய்ய முடியாத அவல நிலை ஏற்படுகிறதாம்.

ஊர் முக்கியஸ்தர்கள் பக்தர்கள் புகார் கொடுக்க நினைத்தாலும் திருக்கோவிலில் புகார் பெட்டியோ அல்லது புகார் எண்ணோ இல்லாததால் புகார் செய்ய முடியாத சூழல் ஏற்படுகிறதாம்.

அதே போல் 1992 ஆம் ஆண்டிலிருந்து அரசு ஆணைப் படி பணியில் இருக்கும் ராமலிங்கம் என்பவருக்கு பூசாரிப்பணி வழங்காமல், 2006 இல் பணியில் சேர்ந்த குமார் என்பவருக்கு அரசாணை வழங்கியுள்ளனர்.

இவர் ஓர் ஆண்டு காலம் தற்காலிக பூசாரியாக இருந்துள்ளார். பின்னர் மீண்டும் சுழற்சி முறையில் பூசாரியை மாற்றும்போது என்னால் பணி செய்ய முடியாது என்று குமார் பூசாரி பணியில் இருந்து விலகி விட்டாராம்.

பிறகு 2016 ஆம் ஆண்டு 110 விதியின் கீழ் அன்றைய முதல்வர் ஜெயலலிதா சட்டப்பேரவையில் கிராம பூசாரிகள் பணி நிரந்தரம் செய்யப்பட்டபோது, 1992 ஆம் ஆண்டிலிருந்து அரசாணை பெற்று பூசாரியாக இருந்து வரும் ராமலிங்கம் என்பவருக்கு பணி நிரந்தரம் செய்யாமல், குமார் பூசாரியை பணத்தைப் பெற்றுக் கொண்டு நிரந்தர பணி ஆணை வழங்கி உள்ளாராம்.

இந்து அறநிலையதுறைக்கு சொந்தமான அருள்மிகு ஸ்ரீ அழகர் கோயில் வகையறா திருக்கோயில் பிரார்த்தனை சிலைகளுக்கு

ஆலய ரசீது வழங்காமல், போலியான முறையில் பக்தர்களை ஏமாற்றி டாக்டர், இன்ஜினியர், திருமண தம்பதியினர், குழந்தைகள் என மூன்று அடி பொம்மை சிலைக்கு 3500 ரூபாயும் படைப்பதற்கு ரூபாய் 500 என்றும், அதேபோல் 5 அடி சிலைக்கு ரூபாய் 4500 ல் இருந்து 5500 வரை வசூலித்து வருகின்றனராம். மேலும் கணக்கர் சரவணனின் மகன் செல்வகுமார் மற்றும் அவரது உறவினர் மகன் பிரசாந்த் ஆகியோரும் கோவிலில் வேலை செய்து வருகிறார்களாம், இவர்களின் ஜிபே மற்றும் வங்கி கணக்குகளின் மூலமே அண்டர்கிரவுண்ட் பணபரிமாற்றம் நடைபெறுவதாக கூறப்படுகிறது. மேலும் பெண் பக்தர்களிடம் சில்மிஷங்களிலும் ஈடுபட்டு வருவாதவும் கூறுகிறார்கள்.

கணக்கர் சரவணனுடன் சேர்ந்து EO ரமேஷ் பாபு வும் அரசுக்கு வருவாய் இழப்பை ஏற்படுத்துவதுடன் பல்வேறு முறை கேடுகளில் ஈடுபட்டு வருவதாவே கூறப்படுகிறது.

இது தொடர்பாக பக்தர்கள் கேள்வி கேட்டால் நீங்கள் எங்கு போய் வேண்டுமானாலும் புகார் கொடுங்கள் என்னை ஒன்றும் செய்ய முடியாது ஏனென்றால் அமைச்சர் சேகர்பாபு எங்களுக்கு வேண்டப்பட்டவர் என்றும் இங்கு நாங்கள் தான் ராஜா என்றும் ஆட்டம் போடுகிறார்களாம்.

சிவன் சொத்து குல நாசம் என கேள்விப்பட்டிருக்கிறோம், கோயில் சொத்தை வைத்து கோடிக்கணக்கில் முறைகேடாக சுருட்டி அரசுக்கு வருவாய் இழப்பை ஏற்படுத்துவதுடன் அரசுக்கு கெட்ட பெயரை ஏற்படுத்தி வரும் EO ரமேஷ் பாபு மற்றும் கணக்கர் சரவணன் மீது துறை ரீதியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே பக்தர்களின் கோரிக்கையாகும் செய்வார்களா? கடவுளுக்கே வெளிச்சம்....

● கண்ணாடி வரதராஜன்


தப்பு செய்தவர் திருந்தியாகனும்; தவறு செய்தவர் வருந்தியாகனும்!

லட்சியம் வெல்லும்

RNI Regd. No. TNTAM/2015/63921

அரசியல் - புலனாய்வு - சமூக விழிப்புணர்வு மாத இதழ்

தனி பிரதி ரூ. 20*

ஆண்டு சந்தா ரூ. 240

5 ஆண்டு சந்தா ரூ. 1,200

(தபால் செலவு உள்பட)



* நிபந்தனைகளுக்குட்பட்டது

15.07.2025 அன்று நடைபெற இருக்கின்ற லட்சியம் வெல்லும் இதழின் பதினொறாவது ஆண்டு விழா நிகழ்வின் போது குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 50 சந்தாதாரர்களுக்கு சிறப்பு பரிசுகள் வழங்கப்படும்.

லட்சியம் வெல்லும் இதழின் புதிய முன்னெடுப்பு!

யோசிப்போம் வாங்க

பெற்றோர்களாகிய நாம், எதிர்கால சந்ததியினரை உருவாக்கும் இளைய தலைமுறையையும், மழலை மொழி பேசும் குழந்தைகளையும் உளவியல் ரீதியாக வாசிப்பு பழக்கத்தை உருவாக்கினால் யோசிக்கும் திறமையும் தமிழை நேசிக்கும் இயல்பும் உருவாகும்.

இந்த கோட்பாட்டை தமிழகம் முழுவதும் வாழுகின்ற தமிழர்கள் மத்தியில் உருவாக்க வேண்டும் என்ற உன்னத நோக்கத்தில் செயல்படும் லட்சியம் வெல்லும் மாத இதழ் உங்களை நாடி வருகிறது. சமூகத்தில் நடைபெறும் மறுக்கப்படும், மறைக்கப்படும் நிகழ்வுகளின் உண்மைகளை ஆதாரத்துடன் துணிச்சலுடன் மக்களின் பார்வைக்கும், அரசின் பார்வைக்கும் கொண்டு செல்வதில் லட்சியம் வெல்லும் மாத இதழ் ஓரளவு வெற்றி பெற்றுள்ளது என்பதை தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

இந்த இலக்கை நோக்கி பயணிக்க எங்களுடன் பார்வையாளராக மட்டும் இல்லாமல் பங்காளர்களாக மாறி லட்சியம் வெல்லும் மாத இதழில் சந்தாதாரர்களாக பயணிக்க அனைவரையும் இருகரம் கூப்பி வரவேற்கிறோம்.

அலுவலக முகவரி : லட்சியம் வெல்லும் மாத இதழ், 2/48 C சம்பூர்தி காம்ப்ளக்ஸ், 2- வது தளம், பொன்னகர், திருச்சி - 620 001

தொடர்புக்கு : 9443852805, 9943483046



# பொன்முடி மீது வீசப்பட்ட சேறு..

## மக்கள் மீது வீசப்பட்ட நிவாரண பொருட்கள்...

பெஞ்சல் புயல் காரணமாக பல பகுதிகள் வெள்ளக்காடாக காட்சியளித்தது. இதில் பல கிராமங்கள் தண்ணீரில் மிதந்தது மட்டுமல்லாது இருளிலும் மூழ்கியது. அரசின் பார்வை சென்னையில் மட்டுமே மிக அதிக அளவில் இருந்ததாகவும், பாதிக்கப்பட்ட பிற மாவட்டங்கள் மீது கவனம் செலுத்தாமல் இருந்ததாக குற்றச்சாட்டு எழுந்தது.

அரசு சார்பாக நிவாரணங்களும் அறிவிக்கப்பட்டு வழங்கப்பட்டது. சென்னை மட்டுமல்லாமல் திருவண்ணாமலை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி மற்றும் கடலூர் ஆகிய நான்கு மாவட்டங்களை வெள்ளம் துவம்சம் செய்தது. திருவண்ணாமலை மாவட்டத்தில் சென்னகேசவ மலைகளுக்கு இடையே தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட சாத்தனூர் அணையில் இருந்து எந்த வித முன்னறிவிப்பு இன்றி திடீரென்று வினாடிக்கு 1.68 லட்சம் கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டதால், 38 கிராமங்கள் நீரில் மூழ்கின. மக்களுக்கான மீட்பு பணிகள், நிவாரண பொருட்கள், உணவு, தண்ணீர் கிடைக்காததால் கிராம மக்கள் போராட்டம்,மறியல் செய்தனர். விழுப்புரம் மாவட்டம் அரசூர், இருவேல்பட்டு மற்றும் சுற்றியுள்ள 18 கிராம மக்களுக்கு நிவாரண உதவிகள் எதுவும் வழங்கவில்லையாம்.

நான்கு நாட்களாக மின்சாரம் இல்லை, உணவு தண்ணீர் கூட கிடைக்கவில்லை, எங்கள் வீட்டு பொருட்கள் அனைத்தும் அடித்து செல்லப்பட்டது என்ற கோபத்தில் செஞ்சி திருவண்ணாமலை சாலைகளிலும், திருச்சி சென்னை சாலைகளிலும் போராட்டம் நடத்தினர். அமைச்சர் பொன்முடி, கௌதம் சிகாமணி, எம்எல்ஏ அன்னியூர் சிவா ஆகியோர் காரில் இருந்து இறங்காமலே மக்களிடம் விவரம் கேட்டுள்ளனர். கோபமடைந்த மக்கள் மூன்று நாட்களாக வராத நீங்கள் இப்போது ஏன் வந்தீர்கள் என கேட்டு அமைச்சர் பொன்முடி, எம்எல்ஏ அன்னியூர் சிவா, மற்றும் கௌதம் சிகாமணி மீது சேற்றை வாரி ஊற்றினார்களாம். தப்பித்தால் போதும் என மூவரும் அங்கிருந்து சென்றுள்ளனர் .


மக்களிடம் விசாரித்த போது மக்களுக்கான இந்த அவல நிலை திமுகவின் திராவிட மாடல் ஆட்சிக்கான நற்சான்றிதழ் என ஆவேசப்பட்டனர்.

இந்நிலையில் திண்டிவனம் பகுதியில் நிவாரண பொருட்களை கையில் வினியோகம் செய்யாமல், கூட்டத்தில் இருந்தவர்களை நோக்கி தூக்கி வீசியது மக்களை மேலும் வேதனையடைய செய்ததாம். நிவாரண பொருட்கள் கிடைக்காத மக்கள் மற்றவர்கள் வாங்கி வைத்திருந்த பொருட்களை பறித்து சென்றதால் அந்த பகுதி போர்க்களமானதாம். பின்னர் போலீஸ் வரவழைக்கப்பட்டு அடி தடியும் நடைபெற்றதாம்.

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு பொருட்களை இழந்த நாங்கள் போலீஸிடம் அடி வாங்க வேண்டிய சூழலும் ஏற்பட்டது என எண்ணி அப்பகுதி மக்கள் மிகவும் வேதனைப்பட்டனராம்.

முறையாகவும் பொறுமையாகவும் கௌரவமாகவும் நிவாரண பொருட்களை வழங்க வேண்டும் என்பதே அனைவரின் எண்ணம் ஆகும்.

● ரவிச்சந்திரன்



# மதுரையில் பூகம்பத்தை கிளப்பும் வேதாந்தா...?

## புராதன சின்னங்கள் அழியும் அபாயம்?

மதுரை மாவட்டம், மேலூர் அரிட்டாப்பட்டி சுற்றியுள்ள 5 ஆயிரத்து 15 ஏக்கர் பரப்பளவில் சுற்றியுள்ள நாயக்கர்பட்டி, தெற்குத் தெரு, முத்துவேல் பட்டி, கிடாரிப்பட்டி, எட்டிமங்கலம், செட்டியார்பட்டி, மற்றும் தமிழக வனத்துறை கட்டுப்பாட்டின் கீழ் உள்ள, தமிழகத்தின் முதல் பாதுகாக்கப்பட்ட பல்லுயிர் மரபுத் தலமான இந்த மலை மற்றும் வனப்பகுதியில் வாழும் அரியவகை பறவைகள், வனவிலங்குகளின் வாழ்விடம் பாதிக்கும் வகையில் மத்திய அரசின் கனிமம் மற்றும் சுரங்கத்துரை அமைச்சகம் தென் மாவட்டங்களில் இயற்கை சீற்றம் ஏற்படும் விதம், பூமிக்கு அடியில் பல ஆயிரம் கிலோமீட்டர் ஆழத்திற்கு சுரங்கம் அமைத்து டங்ஸ்டன் கனிமம் வெட்டி எடுக்கும் உரிமையினை வேதாந்தா நிறுவனத்தின் “ஹிந்துஸ்தான் ஜிங்க் லிமிடெட்” நிறுவனத்திடம் இதற்கான (உரிமம்) உரிமையை கொடுத்துள்ளது.

இத்திட்டம் செயல்படுத்தப்பட்டால் அரிட்டாபட்டி மலையை ஒட்டியுள்ள நான்கு திசைகளிலும் உள்ள வரலாற்று சின்னங்கள் மொத்தமாகவே அழிக்கப்படும், மேலும் டங்ஸ்டன் கனிம சுரங்கம் அமையவுள்ள பகுதியில் இயற்கையாக உள்ள சமணப்படுகை, குடவரை கோயில், அழகர் கோயில்களின் அஸ்திவாரமே ஆட்டம் கண்டு அழிந்தும் விடும்.

மேலும் இத்திட்டத்திற்கான உரிமம் ஒப்படைக்கப்படும்முன்னரே “நாய்க்கர்பட்டி டங்ஸ்டன் கனிம தொகுதி” என பெயரிடப்பட்டது விந்தையாக உள்ளது.

இன்னும் சூற்று புற சான்று பெறப்படவில்லை, தமிழக அரசின் அனுமதி பெறப்படவில்லை, சுற்றுப்புற கிராம மக்களின் கருத்துக்கள் பெறப்படவில்லை, எதிர் காலத்தில் வரக்கூடிய இயற்கை சீற்றங்கள் குறித்த ஆய்வுகள் நடத்தப்படவில்லை, இப்படி இருக்கும் போது “நாயக்கர்பட்டி டங்ஸ்டன் கனிம தொகுதி” என விஷமித்தனமாக பெயரிடப்பட்டுள்ளது தமிழகம் மீதான மத்திய அரசின் வன்மத்தை தான் காட்டுகிறது.



ஏற்கெனவே வேதாந்தா நிறுவனத்தால் தூத்துக்குடியில் ஏற்பட்ட விஷவாய்வு கசிவு, இதை கண்டித்து நடந்த போராட்டத்தில் ஏற்பட்ட துப்பாக்கி சூடு, இதன் விளைவாக ஏற்பட்ட 13 நபர்களின் மரனம், ஆகியவற்றை தொடர்ந்து தூத்துக்குடி "ஸ்டெர்லைட் ஆலை" தமிழக அரசால் மூடப்பட்ட சம்பவங்களுக்கு இன்று வரை துளி நிவாரணம் கூட கிடைக்காமல் மக்கள் அவஸ்தை படுவதை கூட பார்த்து பொருப்புணர்வு இன்றி மத்திய அரசு மேலும் ஓர் நிறுவனம் நடத்த வேதாந்தாவுக்கு அனுமதி அளித்துள்ளது மக்களின் உயிர் மீது விளையாடும் செயல்லே. தமிழகத்தில் அனுமதி இல்லாமல் டங்ஸ்டன் சுரங்கம் அமைக்க முடியாது என்றாலும், அன்றைய தி.மு.க அரசு ஸ்டெர்லைட் ஆலை அமைக்க அனுமதி வழங்கியது, பிறகுவந்த அ.தி.மு.க அரசு ஆலைக்கு சாதகமாக துப்பாக்கி சூடு நடத்தியது, புரட்சி புயல் ஆலைக்கு எதிராக புயல் வேகத்தில் கேஸ் நடத்தியும், வேதாந்தாவிடம் புரட்சி புயல்



சோரம் போய்விட்டது என்ற பேச்சும் எழுந்து அதும் புஸ்சுனு அடங்கிவிட்டது.

இந்நிலையில் ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூட உச்சநீதி மன்றம் தீர்ப்பளித்தும், ஸ்டெர்லைட் நிறுவனத்தின் மறு சீராய்பு மனுவை தள்ளுபடி செய்து தீர்ப்பளித்துள்ளது வைகோவுக்கு கிடைத்த வெற்றி என்றும் மார்தட்டுகின்றனர்.ஸ்டெர்லைட் ஆலையை சரிவர ஆய்வு செய்யாத அதிகாரிகளுக்கும், தூத்துக்குடி அசம்பாவிதத்துக்கு காரணம் ஆன அரசு அதிகாரிக்களுக்கு தண்டனை கிடைப்பது எப்போது? பாதிப்புக்குள்ளான மக்களுக்கு நிவாரணம் கிடைப்பது எப்போது? போன்ற மில்லியன் டாலர் கேள்விகளுக்கு இடையூராக இருப்பது அனைத்தும் அரசியல் வாதிகளின் திருவிளையாடல்கள் தான் என்பது மறுக்க முடியாது உண்மை.



சட்டத்தின் ஒட்டைகளை சாதகமாக பயன் படுத்தி, அரசியல் சதுரங்க ஆட்டத்தின் விளைவாகவே ராஜிவ் காந்தி கொலையாளிகள் தப்பித்து அரசு பாதுகாப்புடன் விமானம் மூலம் சிறகடித்து பறந்து சென்றனர்.

நாட்டின் பிரதமருக்கே இந்த கதி என்றால், சராசரி குப்பனுக்கும், சுப்பனுக்கும் எப்படி நியாயம் கிடைக்கும் என்பதே தூத்துக்குடி மக்களின் கவலை.

ஸ்டெர்லைட்க்கு எதிரான வழக்கில் நீதி கிடைக்க கால் நூற்றாண்டுகள் கடந்து விட்டன ஆனால், நிரந்தர நிவாரனத்துக்கு இன்னும் எத்தனை நூற்றாண்டுகள் காத்திருக்க வேண்டும், என்ற மக்களின் கவலை தீரும் முன்னரே மதுரை மண்டலத்தில் வேதாந்தாவின் டங்ஸ்டன் சுரங்கம் மீண்டும் இன்னொறு பூகம்பத்தை ஏற்படுத்தியுள்ளது தமிழகத்தின் சாபக்கேடாகவே பார்க்கப்படுகிறது.

**இத்திட்டத்திற்கான உரிமம் ஒப்படைக்கப்படும்முன்னரே "நாய்க்கர்பட்டி டங்ஸ்டன் கனிம தொகுதி" என பெயரிடப்பட்டது விந்தையாக உள்ளது.**

● முத்துக்குமார்



# என் வாழ்க்கையை மாற்றியது தனுஷ்தான்.. ஜிவி பிரகாஷ் சொன்ன சீக்ரெட்

ஜிவி பிரகாஷ் தமிழ் சினிமாவில் மிகப்பெரிய இசையமைப்பாளர். இடையில் இசையமைப்பதை குறைத்துக்கொண்டு நடிப்பதில் கவனம் செலுத்திவந்தார். இருந்தாலும் சில படங்கள் தவிர்த்து அவருக்கு பெரிதாக கைகொடுக்கவில்லை. இருப்பினும் தொடர்ந்து நடித்துவருகிறார். இந்தச் சூழலில் அவர் தனுஷ் குறித்து ஒபனாக பேசியிருக்கிறார்.

பிறை தேடும் இரவிலே பாடலை சைந்தவி பாடியபோது ரசிகர்கள் உருகிப்போயினர். இந்நிலையில் ஜிவி அளித்த பேட்டி ஒன்று ட்ரெண்டாகியுள்ளது. தனுஷ் குறித்து அவர் பேசுகையில், 'பொல்லாதவன் படம்தான் தனுஷுக்கு நான் இசையமைத்த முதல் படம். அந்தப் படத்தின் ஆடியோ வெளியீட்டு விழாவில்தான் நாங்கள் இரண்டு பேரும் முதன்முதலாக சந்தித்துக்கொண்டோம்.

எனது வாழ்க்கையில் நான் அடுத்தக்கட்டத்துக்கு போனதெல்லாம் தனுஷுக்கு நான் இசையமைத்த படங்கள் மூலம்தான். மயக்கம் என்ன, அசுரன் என அந்தப் படங்களின் லிஸ்ட் இருக்கும். நானும் அவரும் ரொம்பவே க்ளோஸ் ஃப்ரெண்ட்ஸ். வாடா மச்சான், போடா மச்சான் என்றுதான் பேசிக்கொள்வோம். திடீரென எங்காது ஊருக்கு ஒன்றாக செல்வோம். அவரைப் பொறுத்தவரை பிடிக்கவில்லை என்றால் மூஞ்சில் அடிச்ச மாதிரி பேசிவிடுவார்' என்றார். தனுஷ் இயக்கி நடிக்கும் இட்லி கடை படத்துக்கும் ஜிவிதான் இசை என்பது குறிப்பிடத்தக்கது.

# மதுரை கள்ளழகர் கோயிலில் சிவகார்த்திகேயன்..



மதுரை மாவட்டம், மேலூர் அருகே உள்ள ஸ்ரீ கள்ளழகர் திருக்கோயிலில் நடிகர் சிவகார்த்திகேயன் தனது மனைவி ஆர்த்தியுடன் வந்து சுவாமி தரிசனம் செய்தார். அப்போது பதினெட்டாம்படி கருப்பணசாமி சன்னதிக்குச் சென்று சுவாமிக்கு அரிவாள் காணிக்கையாக வழங்கினார்.

தமிழ்த் திரையுலகில் தனக்கென தனி முத்திரையைப் பதித்து முன்னணி நடிகராக வலம் வந்து கொண்டிருக்கிறார் நடிகர் சிவகார்த்திகேயன். தமிழ் சினிமாவில் இவரது வளர்ச்சி என்பது ஜெட் வேகத்தில் சென்று கொண்டிருக்கிறது. சிவகார்த்திகேயனின் கடைசி படமான அமரன் திரைப்படம் 350 கோடி ரூபாயை வசூலித்து சாதனை படைத்தது.


## சினிமா செய்திகள்

# புஷ்பா 2 Review: பாதியில் அணைந்து போன ஃபயர்

சண்டைக் காட்சிகளில் லாஜிக் மீறல் என்று சொல்லமுடியாது, லாஜிக் மீறலில் தான் சண்டைக் காட்சிகள் என்று வேண்டுமானால் சொல்லலாம். 90 களின் இறுதியில் வரும் சீன படங்களில் ரோப் கட்டிக் கொண்டு பறந்து பறந்து சண்டை போட்டுக் கொண்டிருப்பார்கள். இப்போதும் இந்திய திரைப்படங்களில் ரோப் கட்டி சண்டைக் காட்சிகள் படமாக்கப்பட்டாலும் அவை பெரிதாக துருத்திக் கொண்டு தெரிவதில்லை. ஆனால் 90 களின் சீன படங்களுக்கே சவால் விடும் வகையில் கால் தரையிலேயே படாதவாறு காற்றிலே ஊஞ்சல் ஆடிக் கொண்டிருக்கிறார் ஹீரோ. அதிலும் க்ளைமாக்ஸ் எல்லாம் பாலையா லெவலையை தூக்கிச் சாப்பிடும் ரகம். விட்டால் திரையை கிழித்துக் கொண்டே நம்முடைய கழுத்தையும் கவ்விவிடுவாறோ என்று கையை கழுத்தில் வைத்துக் கொண்டே பார்க்க வேண்டியிருந்தது.

படத்தின் நீளம் சுமார் 3.15 மணி நேரம். படத்தில் ஒரு காட்சியில் ஹீரோயின் கர்ப்பமாக இருப்பது தெரிந்தது கோயிலில் புடவையை கட்டிக் கொண்டு சுமார் ஒரு அரை மணி நேரம் ஆடுகிறார் ஹீரோ. அதனைத் தொடர்ந்து இன்னொரு அரை மணி நேரத்துக்கு சண்டைக் காட்சி வேறு. எதற்காக இந்தக் காட்சி என்று பார்த்தால், க்ளைமாக்ஸில் படமே கிட்டத்தட்ட முடிந்துவிட்ட நிலையில், இத்துடன் முடிச்சு போட்டு ஒரு மெகா சீரியல் போல குடும்ப சென்டிமென்ட்டை நுழைத்து இன்னொரு அரை மணி நேரம் படத்தை ஓட்டியிருக்கிறார்கள். இதில் புஷ்பா மூன்றாம் பாகத்துக்கான லீட் வேறு.

முதல் பாகத்தில் வரும் பிரபலமான ஒரு வசனம் இந்தப் பாகத்திலும் வருகிறது. புஷ்பான்னா ஃபிளவருன்னு நெனச்சியா, ஃபயரு என்று. ஆம், இந்த ஃபயர் மிக பரிதாபமாக பாதியிலேயே அணைங்கு போய் விட்டதுதான் சோகம்.





## மாதம் இருமுறை வெளிவந்து கொண்டிருக்கும் செய்திநேரம் இதழுக்கு

## செய்திகள் மற்றும் விளம்பரம், சேகரிக்க தாலுக்கா வாரியாக செய்தியாளர்கள் தேவை

(விரைவில் தினசரி இதழாக)

ஆர்வம் உள்ளவர்கள் கீழ்கண்ட மின்னஞ்சலுக்கோ அல்லது வாட்சப் எண்ணிற்கோ உங்களது புகைப்படத்துடன் கூடிய சுயவிபர படிவத்தை (Bio Data) அனுப்பி வைக்கவும்

Email: **seithineramtry@gmail.com**
Whatsapp No: **9080790062, 9842109219,**



# அண்ணாதுரையை மறந்த திராவிட கட்சிகள்...

காங்கிரஸ் பேரியக்கத்தை வீழ்த்தி தி.மு.க வை அறியனையில் ஏற்றி தமிழகத்தின் முதல்வரானார் பேரறிஞர் அண்ணாதுரை.

அண்ணா 1909 ஆம் ஆண்டு செப்டம்பர் 15ம் நாள், காஞ்சிபுரத்தில் உள்ள எளிமையான நெசவு குடும்பத்தில் நடராசன், பங்காரு அம்மாள் தம்பதிக்கு மகனாகப் பிறந்தார்.

1928ம் ஆண்டு பச்சையப்பன் கல்லூரியில் சேர்ந்து பி.ஏ. படித்தார்.

1930ம் ஆண்டு ராணி அம்மையாரை வைதிக முறையில் திருமணம் செய்தார்.

1935ம் ஆண்டு திருப்பூரில் நடை பெற்ற செங்குந்தர் இளைஞர் மாநாட்டில் கலந்து கொண்டு முதல் முறை தந்தை பெரியாரைச் சந்தித்தார், அன்று முதல் பெரியாரின் தளபதியானார்.

1949 செப்டம்பர் 18ம் நாள் “திராவிட முன்னேற்றக் கழகம்” ஏற்படுத்துவதாக அறிவித்தார், அன்று மாலை சென்னை ராயபுரம் ராபின்சன் பூங்காவில் நடை பெற்ற முதல் பொதுக்கூட்டத்தில் “திராவிட முன்னேற்றக் கழகம்” தோன்றிவிட்டது.

1957ம் ஆண்டு நடை பெற்ற தி.மு.கவின் பொதுக்குழு மற்றும் செயற்குழுவில், பொது தேர்தலில் திமுக போட்டியிடுவது எனத் தீர்மானம் நிறை வேற்றினர்.

1957 தேர்தலில் அண்ணா, கலைஞர், பேராசிரியர் அன்பழகன் உட்பட தி.மு.க சார்பில் 15 சட்டமன்ற உறுப்பினர்களும், 2 நாடாளுமன்ற உறுப்பினர்களும் தேர்வாகினர்.

1957 மே 7ம் தேதி அன்றைய “சென்னை மாநிலம்” என்பது “தமிழ்நாடு” என அழைக்கப்பட வேண்டும் என்ற அண்ணாவின் தீர்மானம் வெற்றி பெறவில்லை.

1958 மார்ச் 2ம் தேதி தி.மு.கவை மாநிலக் கட்சியாக அங்கீகரித்த இந்திய தேர்தல் ஆணையம், தி.மு.கவுக்கு உதயசூரியன் சின்னம் வழங்கியது.

1962ஆம் ஆண்டு தேர்தலில் வெறும் 50 இடங்களில் தி.மு.க வெற்றி பெற்ற போதும், காஞ்சிபுரம் தொகுதியில் அண்ணா தோல்வி அடைந்தார், காஸ்கிரஸ் 138 இடங்களைக் கைபற்றி, 1962 மார்ச் 15ம் தேதி காமராஜர் முதல்வரானார்.




1962ம் ஆண்டு ஏப்ரல் 30ம் தேதி நாடாளுமன்றமாநிலங்களவைக்கு தி.மு.கவால் தேர்வு செய்யப்பட்டார் அண்ணா.

ஹிந்தி திணிப்பு குறித்து நாடாளுமன்றத்தில் பேசிய அண்ணா "அஞ்சாமல் ஹிந்தியை எதிர்த்து போராடுவோம், ஹிந்தி எதிர்க்கும் போராட்டத்தில் 4 ஆண்டுகள் அல்ல, 40 ஆண்டுகளுக்கு சிறைக்குப் போக தயார்" என்றார்.

அண்ணாவின் ஹிந்தி எதிர்ப்பு போராட்டம் தீவிரம் அடைந்தது, 1967ம் ஆண்டு தேர்தலில் 173 தொகுதிகளில் போட்டியிட்ட அண்ணாவின் தி.மு.க, 138 இடங்களில் வெற்றி பெற்றது. அன்றைய நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட்ட தி.மு.க, 25 தொகுதிகளில் வெற்றிவாகை சூடியது.

அன்று முதல் காங்கிரஸ் வேர் அறுக்கப் பட்டு இன்று வரை 57 ஆண்டுகளாக

தி.மு.க, அ.தி.மு.க, அண்ணாவின் பெயரை சொல்லி ஆட்சி சுகத்தை அனுபவித்துவருகின்றன.

இதில் வேடிக்கை என்னவெனில் திராவிடத்தை வழியுருத்தி, ஹிந்தியை எதிர்த்து

ஆட்சி பீடத்தில் அமர்ந்த அந்த அண்ணாவின் காலம் இன்று மலை எறி, கருணாநிதி–ஸ்டாலின் குடும்பத்தார் நடத்தும் பள்ளியிலும், மற்ற தி.மு.கவினர் மட்டும் இன்றி அ.தி.மு.கவின் பிணாமிகள் நடத்தும் அத்தனை பள்ளிகளிலும் இரண்டாவது (2nd Language) அல்லது (3rd Language) முன்றாவது மொழி ஹிந்தி சொல்லித்தர பட்டு தி.மு.க இன்று ஹிந்தியின் கூடாரமாகவே மாறி விட்டது.

இப்படி அண்ணாவின் பெயரை சொல்லி ஆட்சி பீடத்தில் அமர்ந்துள்ள தி.மு.கவும், எதிர் கட்சியாக உள்ள அதிமுகவும் அண்ணாவையும், அண்ணாவின் வாரிசுகளையும் மறந்து தங்களின் வாரிசுகளுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுப்பது தான் இன்றைய திராவிட கட்சிகளின் இந்த நூற்றான்டிர்கான ஹிந்தி டிஜிட்டல் கொள்கை.

தி.மு.க வின் நிறுவனரும், முன்னாள் முதல்வருமான அண்ணா மற்றும் ராணி அம்மையாருக்கு குழந்தை இல்லாததால், அண்ணா தனது சகோதரியின் மகனான பரிமளத்தை தத்தெடுத்துக் கொண்டார்.

பரிமளத்திற்கு சுருத்திகா ராணி என்ற மகள் உள்ளார்.

பரிமளம் - சரோஜா தம்பதியின் மகள் (சுருத்திகா மகள்) வழிப்பேத்தி இந்திய



தூதரக அதிகாரியான பிரித்திகா ராணிக்கும் மதுரை டாக்டர்கள் சரவணபூபதி - ரோசலின் தம்பதியின் மகன் ராஜஸ்தான் மாநிலத்தின் துணை கலெக்டரான சித்தார்த் பழனிச்சாமிக்கும் மதுரை பாண்டி கோயில் தனியார் திருமண மண்டபத்தில் இருவீட்டார் சம்மத்துடன் ஐ.ஏ.எஸ் அதிகாரிகளான இருவருக்கும் எந்தவித ஆடம்பரம், ஆரவாரம் இல்லாமல், ஐ.ஏ.எஸ் கேடர்ருக்கான பந்தாகூட இல்லாமல் எளிமையான முறையில் திருமணம் நடந்தது.

ஆனால் அண்ணாதுரை... அண்ணா... என 57 ஆண்டுகளாக முழக்கமிட்டு திராவிட ஆட்சி செய்யும் ஸ்டாலின், அமைச்சர்கள், எம்.எல்.ஏக்கள், மதுரை மாவட்ட தென் பாண்டி சிங்கம், மட்டும் இன்றி அ.தி.மு.கவின் எடப்பாடி, சசிவகையரா சுயநலமே வாழ்க்கை என உடன் வந்தவர்களின் நலனை பற்றி அக்கறை இன்றி துணை முதல்வராகிய பன்னீர், ஆகியோர் கூட செல்ல வில்லை.

வாழ்த்து சொல்ல மனம் இல்லை, அண்ணாவின் பேத்தி பிரித்திகா ராணிக்கு திருமணம் நடை பெற்ற இதே வேலையில், திடீர் கல்வித் தந்தையாக மாறிய தனலட்சுமி சீனிவாசன் மகன் கதிரவனின் மகள் நீவாதி மற்றும் நகுலன் திருமண விழாவில் பல

கோடிகள் செலவுசெய்து நடந்ததும், துணைமுதல்வர் உதயநிதியை இத்திருமண விழாவுக்கு வரவேற்க ரூ. 300/- கொடுத்து 3,000 நபர்களை கூலிக்கு பிடித்து அழைத்து சென்று வரவேற்றதும், ஸ்டாலின் மருமகன் சபரீசன், அமைச்சர்கள் என போட்டி போட்டு கும்மி அடித்து வாழ்த்தியது தான் திராவிட மாடல் அண்ணாயிசமா? இது தான் இவர்கள் அண்ணாவுக்கு தரும் மரியாதையா? அண்ணாவை பற்றி தெரியாதவர்களுக்கு கோடிகள், அண்ணாவின் குடும்பத்தாருக்கு தெருகோடியா?

திருமணத்திற்கு தான் சென்று வாழ்த்த வில்லை, திருமணம் முடிந்த பிறகு இவர்களின் "X" தளத்தில் ஒரு சிறிய வாழ்த்து செய்தி கூட போட நேரம் இல்லாதது தான் வேதனை இதனை ஏன் இவர்கள் உணர வில்லை? பதவிப் பேய் கண்ணை மறைத்து விட்டது என்பதே யதார்த்த உண்மை.

● ஹாசன்

# உள்ளாட்சி தேர்தல் நடக்குமா? நடக்காதா?

தமிழகத்தில் உள்ள மாவட்ட ஊரக உள்ளாட்சிகளுக்கான பதவிகள் 2024 டிசம்பருடனும், நகர்புற உள்ளாட்சிகளுக்கு தாமதமாக தேர்தல் நடத்தியதால் அதன் பதவி காலம் அடுத்த ஆண்டு 2025 செப்டம்பர் மாதத்துடனும் முடிய போகுதாம்.



இந்த ஒட்டு மொத்த உள்ளாட்சி பதவிகளுக்கு முன் கூட்டியே தேர்தல் நடத்த ஆட்சியாளர்களுக்கு தயக்கமாம்...காரணம் நடிகர் விஜய் கட்சி ஆரம்பிக்க பிளான் பண்ணும் முன்னரே அவரது “நெஞ்சில் குடியிருக்கும்” ரசிகர்கள், கடந்த உள்ளாட்சி தேர்தலில் சுயேச்சைகளாக போட்டியிட்டு 125 பேர் கவுன்சிலராகியதே காரணமாம்.

இந்நிலையில் அனைத்து உள்ளாட்சி பதவிகளுக்கும் சேர்த்து ஒட்டு மொத்தமாக தேர்தல் முன் கூட்டியே வைத்தால், “கோட்” நடிகரோட நெஞ்சில் குடியிருக்கும் த.வெ.க.வின் தோழர்கள், தோழிகள், உத்வேகம் அடைந்து கூடுதல் இடங்களில் வெற்றி பெற்று கவுன்சிலராகிவிட்டால், இது 2026 சட்டசபை தேர்தலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி இப்போதுள்ள சூரிய கூட்டணியிலும் நெருக்கடியை ஏற்படுத்தி, இடியாப்ப சிக்கல் அதிகரித்து விடுமாம்.

இதனால் இப்போது இருக்கும் இந்த கூட்டணி பலத்தை எப்படியும் தக்க வச்சிக்கிட்டு, 2026 சட்டசபை தேர்தலில் வெற்றி பெற்ற பிறகு உள்ளாட்சி தேர்தலை நடத்த முடிவு செய்துள்ளாராம்.

இதுவே சூரிய வாரிசின் எதிர்காலத்துக்கு நல்லதுனு சூரிய கிச்சன் கேபினட்டின் ஆஸ்தான ஜோதிடரான கதிரவன் சொல்லுறாராம்.

இதனால் பதவிக் காலம் முடிய போகும் அனைத்து உள்ளாட்சி துறைகளை நிர்வகிக்க கமிஷனர்களுக்கு கூடுதல் அதிகாரம் கொடுக்கும் மசோதா சட்டசபையில் தாக்கல் செய்து, நிறைவேற்றி, சிறப்பு அதிகாரிகளை நியமிக்கப் போகிறாராம் சூரிய தலைவர்.

தற்போது பதவியில் இருக்கும் கவுன்சிலர்கள் உருட்டு... உருட்டுனு... உருட்டி... சம்பாரித்ததைபார்த்தசிலஉடன் பிறப்புக்கள், நாமும் கவுன்சிலராகி இவர்களை விட கூடுதலாக சம்பாரித்து கெத்தாக வலம் வர வேண்டும் என்று கனவு கண்ட பலரின் கனவு, தலைவரின் முடிவால் சிதைந்து விட்டதாம்.

உடன்பிறப்புகளின் டார்கெட் 2025ல் உள்ளாட்சி... சூரிய குடும்பத்தின் டார்கெட் 2026 சட்டசபை... இவர்களின் கவலை இவர்களுக்கு... அவர்களின் கவலை அவர்களுக்கு... மக்கள் மனசு வைத்தால் அனைவரது கவலைகளும் பறந்து விடும்.

● ஐசக் அருள்ராஜ்



# தளவாய் சுந்தரத்திடம் சரண்டரான எடப்பாடி...?

கடந்த 2021 சட்ட சபை தேர்தலில் கன்னியாகுமரியில் இருந்து வெற்றி பெற்ற தளவாய் சுந்தரம், ''நான் ஜெயிச்சது இலை கட்சியால் அல்ல... தாமரை கட்சி தான் வெற்றியை தேடி தந்துச்சு...னு'' பேசிக்கிட்டு இருந்தவர், ஆர்.எல்.எஸ். ஊர்வலத்தை கொடி அசைத்து துவக்கி வைத்தது, அதிமுக பாஜகவின் அண்டர்கிரவுண்ட் டீலிங்கை வெளிச்சம் போட்டு காட்டியது.

குட்டு வெளியானதால் அதிர்ந்த எடப்பாடியார், சிறுபாண்மை முஸ்லிம்கள், கிருஸ்தவர்களின், ஆதரவுக்காக, ''பாஜகவுடன் ஒட்டும் இல்லை... உறவும் இல்லை...'' என்ற தனது நாடகத்துக்கான கருத்தினை வலியுருத்தி, தளவாய் சுந்தரம் மீது ஒழுங்கு நடவடிக்கைங்கு என்கிற போர்வையில் கட்சி பொருப்பில் இருந்து சஸ் பெண்ட் செய்து, புது(டம்மி) பொருப்பாளரை நியமித்து, முஸ்லிம்கள், கிருஸ்தவர்கள்''குட் புக்கில்'' இடம் பிடிக்க முயற்சித்தார்.

இந்த மாதரி நடவடிக்கைக்கு ஆளானவர்கள், பொதுவாக தலைமைக்கு விளக்க கடிதம் அல்லது மன்னிப்பு கடிதம் கொடுத்த பின்பு தான் மீண்டும் கட்சியில் சேர்த்துக் கொள்வது வழக்கம். அனைத்து கட்சிகளிலும் இதுவே நடைமுறை (ஜெயலலிதா தவிர).

ஆனால் தளவாய் சுந்தரமோ... ''நீக்குனா நீக்கிட்டு போங்கணு அதிமுக தலைமைக்கு எந்த பதிலும் சொல்லாம இருந்ததுடன், வரவிருக்கும் 2026 சட்டசபை தேர்தலில்... இலை கட்சி கடைக்கோடி மாவட்டத்தில், எங்கு நின்றாலும் டெபாசிட் வாங்க முடியாது.. நான் தாமரையில் நின்னு ஜெய்பேன்னு...கர்ஜித்தவாரே இருந்தார். தளவாய் கர்ஜிப்பை கண்டு அஞ்சிய பழனிசாமி வகையரா, ''என்ன... ணே... நீங்க, இதுக்குபோய் இம்புட்டு கோபம் படுறதா... இது எல்லாம் சும்மாணே... உங்களே போய் நீக்குவோம்மாணே...தாமரை எதிர்ப்பாளர்களை நம்ப வைக்க தான் இந்த நாடகம்... ஒரு வேகத்தில் நடவடிக்கை எடுத்ததாக ஒரு மாய தோற்றத்தை உருவாக்க வேண்டியதாகி விட்டது... அம்புட்டு தான்ணே... னு'' தளவாய் சுந்தரத்துக்கு போன் செய்து, அவரை சமாதானப்படுத்தி மீண்டும் தளவாய் சுந்தரத்தை அ.தி.மு.க அமைப்புச் செயலாளராகவும், கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட செயலாளராகவும் மன்னிப்பு கடிதம் பெறாமலே பெற்றதாக சொல்லி மீண்டும் நியமித்து பழனிசாமி தாமரைக்கு எதிரானவர் அல்ல என்பதை நிருபிக்க வேண்டியவர்களுக்கு நிருபித்து மோடி, அமித்ஷாவின் இதயத்தில் மீண்டும் இடம் பிடித்துவிட்டாராம் பழனிசாமி.

இந்நிலையில் இந்தியாவை அடிமைப்படுத்தி உண்மை சரித்திரத்தை மறைத்த ஆங்கிலேய காலனிகளின் நாட்டுக்குச் சென்று ஆங்கிலேய காலனிகளின் யுனிவர்சிட்டியில் படிப்பை முடித்து நாடு திரும்பிய அண்ணாமலை... மீண்டும் ஆக்டிவ் பாலிடிக்சை துவக்க கிராமம், கிராமமா அனைத்து கிராமங்களுக்கும் ரதயாத்திரை பயணம் மேற்கொண்டு கிராமவாசிகளை சந்திச்சு தாமரையை வழுப்படுத்துவதே அவரின் ஸ்கெசாம்.ஆனால் தாமரையின் டில்லி தர்பாரோ எடப்பாடியுடன் கூட்டணி வைக்கும் பிளானை சக்சஸ்சா முடிக்கும் வரை அண்ணாமலை தேசிய பொறுப்புக்கு அனுப்பும் யோசனையில் உள்ளதாம்.

உண்மையினை உணர்ந்த ரத்தின் ரத்தங்கள், பழனிசாமி ஜெயலலிதா போல கூர்மையான கத்தினு இருந்தோம்... ஆனா இப்படி ''அட்டை கத்தியாகிட்டாரேனு வருத்தப்படுகிறார்களாம்.

● சுரேஷ் ஆப்ரகாம்



# ஸ்டாலினை சாய்க்கத் துடிக்கும் பாஜக...

# கோவிந்தா...போடும் எஸ்.வி. சேகர்?

ஒற்றுமையாக இருக்கும் தமிழக மக்களை சிறுபாண்மை, தலித்துகள், பழங்குடியினர், ஹிந்துக்கள் என்ற பிரிவினை பயத்தை ஏற்படுத்தும் சங்பரிவார், ஆர்.எஸ்.எஸ். ஹிந்து முன்னணி ஆதிக்கம் கொண்ட பிராமணர்களின் திரைமறைவுகள் இருக்கும் வரை, பாஜக தமிழகத்தில் ஒரு போதும் கால் பதிக்க முடியாது என்பதை உணர்ந்தே "ஆப்பரேஷன் தாமரையின்" பல டார்கெட்களின் ஒரு அம்பு தான் "ஆப்பரேஷன் பிராமணா்"க்கான ஸ்கெச்.

இந்த ஸ்கெச்சுக்கான அசைன்மெண்ட் படி "பாஜக பிராமணர்களுக்கு எதிரான கட்சி என நிருபித்து மக்களை ஏமாற்றி இறக்கி விடப்பட்டவர்கள் தான் சுப்பிரமணிய சாமி, எஸ்.வி.சேகர், அர்ஜீன் சம்பத், ஓம்கார் பாலாஜி, காடேஸ்வர சுப்பிரமணியம், சட கோபன், நடிகை கஸ்தூரி போன்றவர்கள்.

சுப்பிரமணிய சாமி பாஜக மற்றும் அதன் தலைவர்களை கடுமையாக விமர்சித்து பேசுவதும், தமிழகத்தில் பாஜக அண்ணாமலையால் வளரவில்லை என கூறும் படி செய்து ஒரு மாய தோற்றத்தை உருவாக்கினர். மோடி கொள்முதல் செய்த ரஃபேல் போர் விமானம், மோடியின் படிப்பு சர்ச்சையினை தொடர்ந்து, மோடி பிரதமர் ஆகமாட்டார் என்ற குழப்பத்தை ஏற்படுத்திய

சாமி, திருப்பதி லட்டு பிரசாத விவகாரத்தில், லட்டு தயாரிக்கப்பட்ட நெய்யில் மாமிச கொழுப்பு கலந்துள்ளது என்ற சர்ச்சையினை எழுப்பிய ஆந்திரமாநில பாஜக கூட்டணி அரசின் முதல்வர் சந்திரபாபு நாயுடு கூறுவது பொய் என சாமி மூலம் தெரிவித்தும், உச்ச நீதிமன்றத்தில் வழக்கும் தொடர்ந்து பிராமணர்கள் பாஜகவும் எதிராகவே உள்ளனர் என்ற பொய்யான தோற்றத்தை



உருவாக்கினர், பாஜகவை விமர்சித்த மேனகா காந்நியின் மகன் வருண் காந்தி, நடிகர்

சுத்துஹன் சின்ஹா, திருச்சி சூரியா(எம்.பி. சிவாவின் மகன்) போன்ற பலர் பாஜக கட்சியால் ஒரம்கட்டப்பட்டனர், இருந்தும் சுப்பிரமணிய சாமி கட்சியில் இருந்து நீக்கப்படாமலும் ஒரம் கட்டப்படாமலும் இருப்பதற்கு பிராமணிய சென்டிமெண்ட்டே காரணம் என்பது தான் யதார்த்த உண்மை.

இதே ஸ்டைலை தான் தமிழகத்திலும் கையாள எஸ்.வி.சேகர் பாஜகவால் இறக்கிவிடப்பட்டுள்ளார், என்று



கூறப்படுகிறது அதனால் தான் தமிழக பாஜகவின் முன்னால் தலைவருக்கும், இன்னால் தலைவரான அண்ணாமலைக்கும் எதிராக புல்லாங்குழல் ஊதிவருகிறார், அண்ணாமலைக்கு எதிராக குரல் கொடுத்த பலர், தமிழிசையை தவிர பலர் தமிழக பாஜகவில் இருந்து ஒரம் கட்டப்பட்டனர். இன்று வரை ஒரம் கட்டப்பட்டு வருகின்றனர். நடிகர் எஸ்.வி. சேகர் பாஜகவில் இருந்து ஒரம் கட்டப்படாமல் இருக்க பிராமணய திறைமறைவே காரணம்.

பாஜகவுக்கு எதிராக பேசவைக்கப்பட்ட எஸ்.வி. சேகரின் "ஆப்ரேஷன் தாமரை" திட்டத்தின் பல பாகங்களில் ஒன்று தான் "ஆப்ரேஷன் பிராமணர்" இத்திட்டத்தின் படி நடிகர் எஸ்.வி.சேகர் 2023ல் "தமிழகத்தில் 33 லட்சம் பிராமணர்கள்" உள்ளனர்... அவர்களுக்கான அரசியல் முக்கியத்துவம், அங்கீகாரத்தை அண்ணாமலை கொடுப்பதில்லை... பிராமணர்களுக்கு முக்கியத்துவம் வேண்டும் என்றே "தமிழ் பிராமண தேசம்" கட்சியை துவக்கியுள்ளேன்... பிராமணர்களுக்கு யார் முக்கியத்துவம் கொடுக்கிறார்களோ, அவர்களுக்கே பிராமணர்களின் ஓட்டு... என்ற அஸ்திரத்தை பிரவேசிக்க வைத்துள்ளனர்.

எஸ்.வி.சேகரின் பாகம் ஒரு பக்கம் இருக்க, கலவரம் பிறந்தால் தான் பாஜக வளரும்... வடமாநிலங்களில் பாஜக இப்படித்தான். வளர்ந்தது, சர்ச்சைகள் ஏற்படுத்திய கூத்து "ஹிந்து மக்கள் கட்சியின்" அர்ஜுன் சம்பத், "ஈஷா யோகா" மையம் பற்றிய செய்திகளை வெளியிட்டு கொண்டிருக்கும் நக்கீரன் ஆசிரியர் கோபாலின் நாக்கை அறுத்து, விடுவதாக ஹிந்து மக்கள் கட்சியின் மாநில இளைஞரணி தலைவரும் தனது மகனான ஓம் கார் பாலாஜியை பேச செய்தும், ஓம்கார்பாலஜியின் கைதை எதிர்த்து கோர்ட்டுக்கு செல்லாமல், கைதை எதிர்த்து கோவை வீதிகளில் ஆர்பாட்டம் நடத்தியும் ரோட்டில் படுத்து புரண்டு கலவரம் செய்தது "ஆப்ரேஷன் பிராமணர்"களுக்கான பாஜகவின் கலவர அத்தியாயமே.

சென்னை "ராஜரத்தினம் ஸ்டேடியம்" "ஆர்பாட்டத்தில் "பேசிய "ஹிந்து முன்னணி' மாநில தலைவர் காடேஸ்வரா சுப்பிரமணியம் சடகோபன், "பிராமணர்கள் தமிழகத்தில் 3 சதவிதம் தான் உள்ளனர்... அர்ச்சகர்கள், பட்டாச்சாரியார்கள் தமிழகத்தில் இழிவு படுத்தப்படுகிறார்கள்... ஹிந்து மதத்தை ஒழிக்க பிராமணர்கள் கொச்சைப்படுத்தப்படுகிறார்கள்... முன்னால் பிரதமர் நேரு பிராமணர்கள் இல்லாமல் எந்த கட்சியும் ஆட்சிக்கு வர முடியாது என தெரிவித்த தாகவும், "கேரளாவுக்கும் தமிழகத்துக்கும் தீர்க்கப்படாத பிரச்சினைகள் ஏராளம்...

தமிழகத்தின் நலம், உரிமை, வாழ்வாதாரத்தை பாதிக்கும் பெரியாறு அணை பிரச்சினையில் இன்று வரை கேரள அரசு குடைச்சல் தருகிறது... பெரியார் அணை பிரச்சனை தீர்த்திட கேரளாவிடம் திட்டம் எதுவும் இல்லை..." என பேசியது கர்நாடக - தமிழ்நாட்டுக்கு இருக்கும் காவிரி பிரச்சினை போன்றே கேரளா-தமிழ்நாட்டுக்கான பெரியார் அணைபிரச்சினை வளர்த்து இரு மாநில மக்களின் பரஸ்பர உறவை கெடுத்து கலவரம் ஏற்படுத்தும் நாரதருக்கான வேலையே என்றே பார்க்க படுகிறதாம்.

இவர்களை விட நடிகை கஸ்தூரி ஒரு படிமேலே சென்று தெலுங்கு பேசும் ஆட்சியாளர்களை நேரடியாக விமர்சித்து அரசியல் செய்வதை தவிர்த்து, தெலுங்கு

பேசும் அனைவரையும் “தெலுங்கு பேசும் மக்கள் எப்போது தமிழகம் வந்தார்கள்? எதற்காக வந்தார்கள்? யார் ஆட்சி காலத்தில் வந்தார்கள்? என தூய்மை தொழிலாளர்களை சாடி பேசுவது போல



அனைத்து தெலுங்கு பேசும் மக்களையும் எலக்காரமாக பேசிய கஸ்தூரி மீது வழக்கு பதியப்பட்டு, தலைமறையாகி, தெலுங்கு பேசும் மக்கள் அதிகம் வாழும் பாஜக கூட்டணி ஆட்சி நடைபெறும் ஆந்திராவில் அண்டர்கிரவுண்டு ஆகி தஞ்சம் அடைந்தார், உயர்நீதி மன்றத்தின் கஸ்தூரிக்கான பெயில் ரத்தானதை தொடர்ந்து கஸ்தூரி கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப் பட்டார்.

கஸ்தூரியின் தெலுங்கு பேசும் மக்கள் தொடர்பான அறுவருக்கத்தக்க பேச்சுக்கள் ஆந்திரம், தெலுங்கான, தமிழகம் இடையேயான நல்லுறவை கெடுக்கும் செயல், திருப்பதி கோயிலுக்கு சாமி தரிசனம் செய்ய போகும் தமிழக பக்தர்களை பாதிக்கும் செயல்.

இப்படி தெலுங்கு பேசும் மக்களை பற்றி அரசியல் தலைவர்கள் பேசுவது இது ஒன்றும் முதல் முறை அல்ல... இதற்கு முன் பாஜக தலைவர் எச். ராஜா, நாம் தமிழர் கட்சி சீமான் பேசியுள்ளனர். அவர்கள் மீது எந்த பூகாரும், வழக்கும் பதிவு செய்யப்பட வில்லை, ஆனால் நடிகை கஸ்தூரியின் பிராமணர்களுக்கு ஆதரவான போராட்டத்தில் பேசிய பேச்சு ஹைலைட் ஆகி, தீ பற்றிக் கொண்டது.

கலவரம் பிறந்தால் தான் வழிப் பிறக்கும் என்ற பாஜகவின் திட்டத்தில் பாவம் கஸ்தூரி பகடை காயாக்கப் பட்டு சிறைக்கு இறையாகினார்.

ஹிந்துத்துவ ஆதரவு இயக்களும் சரி, பாஜகவும் சரி, திமுகவும் சரி. தங்களின் ஜாதி, மதம் சார்ந்த அரசியல் செய்வதே “மத சார்பற்ற இந்திய அரசியல் சாசனத்தை” அவமதிக்கும் செயல் என்றே பார்க்கபடுகிறது.

கடந்த மாதம் ஆர்.எஸ்.எஸ் தினம் கொண்டாட்டத்தின் போது, “ஹிந்துக்கள், தலித்துக்கள், பழங்குடியினருக்கு உதவ வேண்டும்” என தெரிவித்தது. ஹிந்துக்கள் என்றால் பிராமணர்கள் மட்டும் தானா? தலித்துக்கள், பழங்குடியினர், தெலுங்கர்கள், ஹிந்துக்கள் இல்லையா? என்ற கேள்விக்கான பதிலை பாஜக தலைவர்கள் தான் தெரிவிக்க வேண்டும்.

இந்நிலையில் பாஜகவின் சதுரங்க ஆட்டத்தை சாதகமாக்க நினைத்த எஸ்.வி. சேகர், ஒரு நல்ல திரை நடிகர், நாடக ஆசிரியர், நாடக நடிகர், அரசியலுக்கு ஒத்துவராத துர்பாக்கிய அரசியல் வாதி என பண் முகங்கள் கொண்டவர், பிராமணர் செண்டிமெண்டில் அதிமுகவில் சேர்ந்து எம்.எல்.ஏ. ஆகி, எஸ்.வி. சேகரின் (DOGMATIC POLICY) “பிடிவாத கொள்கை” அதாவது தனது சொந்தக் கருத்துக்களை உறுதியாக முன்வைத்து மற்றவர்களின் கருத்துக்களை ஏற்கத் தயாராக இல்லாத சேகரின் பிடிவாத குணத்தால் ஜெயலலிதாவால் ஓரம் கட்டப்பட்டு காங்கிரசில் சேர்ந்தும் சேகரின் குசும்பு காங்கிரசில் இருந்தும்
ஓரம் கட்டப்பட்டு தனது இனத்தவர்களின் திறை மறைவில் செயல் படும் பாஜகவில் இணைந்தார்.

இங்கும் பாஜகவில் பிராமணர்களுக்கு முக்கியத்துவம் இல்லை என்ற நாடகத்தை அறங்கேற்றி, “திமுக பிராமனர்களுக்கு நலவாரியம் அமைத்தால், திமுகவுக்கு பிரச்சாரம் செய்வேன், பிராமணர்களின் ஆதரவு தி.மு.கவுக்கு கிடைக்கும் என்ற தோற்றத்தை ஏற்படுத்தி ஸ்டாலினிடம் நெருக்கத்தை ஏற்படுத்தி எம்.எல்.ஏ. ஆகிவிட வேண்டும் என்ற கனவை நினைவாக்க கமலின் நிலைமையை கூட உணராமல் தனது ஆட்டத்தை துவக்கியுள்ளார்.

ஆனால் ஸ்டாலினும் சேகரை வைத்தே அரசியல் ஆட்டத்தை துவக்கியுள்ளதாகவும்

தெரியவருகிறது.

*2006* சட்டசபை தேர்தலில் விஜயகாந்த்தை விமர்சிக்க நடிகர் வடிவேலுவை அன்று கருணாநிதி பயன்படுத்தியது போல, *2026* சட்டசபை தேர்தலில் விஜய்யை விமர்சிக்க எஸ்.வி. சேகரை ஸ்டாலின் பயன்படுத்த இருக்கும் அரசியல் ஆட்டத்தை பார்க்கத்தான் போகின்றனர் மக்கள்.

அன்று முதல் இன்று வரை தமிழக மக்களிடம், பிரமணர், முஸ்லிம்கள், தலித்துக்கள், பழங்குடியினர். கிருஸ்தவர்கள் என்ற வேறு பாடுகள் கிடையாது என்பதே யதார்த்த உண்மை.

*1989*ல் திருச்சி ஸ்ரீரங்கத்தை சேர்ந்த பிராமணரான Y. வெங்கடேச தீட்சதர் ஜனதா கட்சி சார்பில் போட்டியிட்டு தி.மு.க ஆதரவில் வெற்றி பெற்றார். பிராமணர்கள் மட்டும் வெங்கடேசதீட்சதருக்கு ஓட்டளித்து கிடைத்த வெற்றி அல்ல. முத்திரையர், முஸ்லிம்கள், தலித்துகள், அருந்ததியினர் என அனைவரும் சேர்ந்து ஓட்டளித்து கிடைத்த வெற்றி என்பது மறுக்க முடியாத உண்மை.

பாஜக போடும் கோவிந்தா மக்களிடம் செல்லுபடியாகுமா... இல்லை சேகர் போடும் ஜால்ரா ஸ்டாலினிடம் செல்லுபடியாகுமா... என்பதை பொருத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

**● சென்னை சிவக்குமார்**

## பல லட்சம் ஏமாந்த டாக்டர்... உஷார் மக்களே.....



தேனியை சேர்ந்த டாக்டர் ஒருவர் அங்குள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் வேலை பார்த்து வருகிறார். அவரது டெலிகிராம் ஆப்பிற்கு கடந்த ஜூலை மாதம் மர்ம நபர் ஒருவர், ஒரு எஸ்எம்எஸ் அனுப்பியுள்ளார். அதில், ஒரு இணையதள முகவரி குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த இணையதளம் மூலம் பங்குச் சந்தையில் முதலீடு செய்து அதிக லாபம் சம்பாதித்து வருவதாக மர்ம நபர் ஆசைவார்த்தை கூறியுள்ளார். பல லட்சம் லாபம் கிடைக்கும் என்று ஆசைவார்த்தை கூறி நம்ப வைத்துள்ளார் .

அதை நம்பிய டாக்டர், அந்த இணையதளம் மூலம் முதலீடு செய்துள்ளார். முதலில் அவருக்கு லாபம் கிடைப்பது போல் இணையதளம் காட்டியிருக்கிறது. அதை நம்பி அவர் மீண்டும், மீண்டும் முதலீடு செய்தார். அந்த வகையில், மொத்தம் ரூ.*18* லட்சத்து *12* ஆயிரத்து *471* முதலீடு செய்திருக்கிறார்.. அதன்பிறகும் மர்ம நபர் மீண்டும் முதலீடு செய்ய சொல்லியிருக்கிறார்.. ஆனால் அவரால் ஏற்கனவே செலுத்திய பணத்தையும் திரும்ப எடுக்க முடியாத நிலை இருந்தது. அப்போது தான், இவை எல்லாம் செட்டப் என்பதும், ஏமாற்றப்பட்டதும் டாக்டருக்கு தெரியவந்துள்ளது. இதுகுறித்து தேனி சைபர் கிரைம் போலீஸ் நிலையத்தில் டாக்டர் உடனடியாக புகார் செய்தார்

அதன்பேரில் தேனி நகர இன்ஸ்பெக்டர் வெங்கடாசலம் வழக்குப்பதிவு செய்து விசாரணையை தொடங்கினார். டாக்டர் பணம் அனுப்பிய வங்கிக் கணக்கு விவரங்களை போலீசார் ஆய்வு செய்த போது, ஒரு வங்கி கணக்கு திருப்பூர் மாவட்டம் அவினாசியை சேர்ந்த தவுபிக் (வயது *24*) என்பவருக்கு சொந்தமானது என்று தெரிய வந்தது. அவரை தேனி சைபர் கிரைம் போலீசார் பிடித்து விசாரணை நடத்தினார்கள்.

விசாரணையில் அவர், தனது வங்கி கணக்கு விவரத்தை திருப்பூரை சேர்ந்த ராமகிருஷ்ணன் (*26*) என்பவரிடம் கொடுத்ததாகவும், தனது வங்கிக் கணக்கில் வரும் பணத்தை எடுத்து கொண்டு தனக்கு குறிப்பிட்ட தொகையை கமிஷனாக மட்டும் அவர் கொடுப்பதாகவும் தெரிவித்தார். அதன்பேரில் ராமகிருஷ்ணனை போலீசார் பிடித்து விசாரித்தனர். இதையடுத்து தவுபிக், ராமகிருஷ்ணன் ஆகிய *2* பேரையும் கைது செய்து கோர்ட்டில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர். தேனியில் டாக்டர் ஒருவர் *18* லட்சம் ரூபாய் பணத்தை ஏமாந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. உசார் மக்களே...



# கோயில் நிலம் ஆக்கிரமிப்பு...

# மீட்க போராடும் கிராம மக்கள்...

நாமக்கல் மாவட்டம் சேந்தமங்கலம் வட்டத்தில் உள்ள அலங்காநத்தம் ஊராட்சிக்கு உட்பட்ட அ.பாலப்பட்டி கிராமத்தில் அருள்மிகு பெரியசாமி திருக்கோயில் உள்ளது.

சுமார் 100 ஆண்டுகளுக்கு மேலாக அப்பகுதி மக்கள் கோயில் கட்டி வழிபட்டு வருகின்றனர்.

கிராம சர்வே எண் 466/39 நிலத்தில் கோயில் அமைந்துள்ளது. இது அரசு ஆவணப்படி சர்க்கார் புறம்போக்கு கோயில் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இந்நிலையில் தான் அதே கிராமத்தில் குடியிருந்து வரும் அவனாசி மகன் கண்ணன் (எ)ஆறுமுகம் மற்றும் ஆறுமுகம் மகன் பிரபாகரன் ஆகியோர் அத்துமீறி கோயில் இடத்தில் ஒரு பகுதியில் வீடு கட்டி வருகின்றனர். கோயில் நிலம் என்பதால் அருள்மிகு பெரியசாமி குல வகையறா கோயில் நிர்வாகிகள் தட்டிக் கேட்டுள்ளனர்.

ஆனால் ஆக்கிரமிப்பாளர்கள் எதையும் காதில் போட்டுக் கொள்ளாமல் முறைகேடாக ஊராட்சி நிர்வாகத்தில் அனுமதி வாங்கி வீடு கட்டி வருகின்றனர்.



டாக்டர். ச. உமா
இ.ஆ.ப

இது தொடர்பாக கோயில் நிர்வாகத்தை சேர்ந்தவர்கள் மாவட்ட ஆட்சியரிடம் புகார் மனு கொடுத்துள்ளனர். அதன்படி கடந்த 26.08.2023 அன்று குறு வட்ட நில அளவர், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் அரசு ஊழியர்கள் அளவீடு செய்து, வருவாய் ஆய்வாளர் மூலமாக ஆக்கிரமிப்பு உள்ளதை வரைபடம் வரைந்து உறுதி செய்து, பின்பு சேந்தமங்கலம் வட்டாட்சியர் சீனிவாசனுக்கு ஆக்கிரமிப்பு உள்ள பகுதிகளை அகற்ற பரிந்துரை செய்து அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

## மெத்தனம் காட்டும் அதிகாரிகள்..?

வட்டாட்சியர் சீனிவாசன் எருமைப்பட்டி வட்டார வளர்ச்சி அலுவலர் பத்மநாபனுக்கு உடனடியாக ஆக்கிரமிப்பை அகற்ற படிவம் 1 வாயிலாக அறிக்கை அனுப்பி உள்ளார்.




ஆனால் வட்டார வளர்ச்சி அலுவலர் பத்மநாபன் சர்க்கார் புறம்போக்கு நிலத்தில் ஆக்கிரப்பு செய்து வரும் கண்ணன் (எ)ஆறுமுகத்திற்கு சாதகமாக, இரு நபர்கள் தொடர்பான நிலப் பிரச்சினை தனித்தனி பட்டா வழங்கப்பட்டுள்ளது என தவறான அறிக்கையை வட்டாட்சியர் சீனிவாசனுக்கு அனுப்பி வைத்து விட்டாராம்.

அரசு புறம்போக்கு நிலத்திற்கு எப்படி பட்டா வழங்கி இருக்க முடியும், யாரால் பட்டா வழங்கப்பட்டிருக்கும் என்ற ஒரு தகவலும் தெரியாமல் கோயில் குல மக்கள் மாவட்ட ஆட்சியருக்கு மனுக்கள் மீது மனுக்களை அனுப்பி இந்த நிலத்தை மீட்க போராடி வருகின்றனர். ஆனால் அரசு அதிகாரிகள் தன் காதுகளை மூடிக்கொண்டு வேடிக்கை மட்டுமே பார்த்துக் கொண்டிருப்பதாக வேதனையுடன் தெரிவிக்கின்றனர். இது தொடர்பாக அப்பகுதி பெரியவர் ஒருவரிடம் பேசியபோது...

எங்கள் கிராமத்தில் வசித்து வரும் அவனாசி என்பவருக்கு சொந்தமான இடத்தை அவர்களுடைய ஆண், பெண் வாரிசுகளான ரத்தினவேல், சேகர், ஆறுமுகம், பழனியம்மாள், மல்லிகா, (லேட்) பாரதி மனைவி லதா மற்றும் தாமரை ஆகியோருக்கு சொந்தமான இடத்தை பாகம் பிரிக்கும் போது அரசு நிலமான சர்வே எண் 466/39 மற்றும் 466/21 ஆகிய இரண்டு சர்வே எண்களும் சேர்ந்து சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண் 2000/2012 11.12.2012 ஆம் தேதி கிரைய பத்திரம் மோசடியாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதனை ஆராய்ந்து பத்திரப்பதிவு செய்ய வேண்டிய பதிவாளர் தவறியதால் தான் இந்த வில்லங்கம் ஏற்பட்டதற்கான அடிப்படை காரணம்.

முறைகேடான பத்திரப்பதிவை ரத்து செய்ய வேண்டி கடந்த 08.07.2024 அன்று மாவட்ட ஆட்சியர் உமா மற்றும் மாவட்ட பதிவாளரிடம் மனு அளித்தோம். எந்தத் தகவலும் இன்று வரை இல்லை. மீண்டும் அரசாணை எண் 540 ஐ பயன்படுத்தி விரைவாக ஆக்கிரமிப்பை அகற்ற மக்கள் குறைதீர்க்கும் கூட்டத்தில் மனு அளித்தும் எந்த நடவடிக்கையும் இல்லை என்கிறார் வேதனையுடன். மேலும் கோயில் நிர்வாகி கூறும்போது அரசு நிலத்தை முறைகேடாக பத்திரப்பதிவு செய்தது மட்டுமின்றி முறைகேடாக ஊராட்சி நிர்வாகம் மூலம் அனுமதி பெற்று வீடும் கட்டி வருகிறார்கள்.

அரசு புறம்போக்கு நிலத்தில் தொகுப்பு வீடு கட்டவும் அனுமதி வழங்கியுள்ளது தான் வேடிக்கை. நேர்மையான குடிமகனுக்கு வீடு கட்டுவதற்கு ஆயிரத்தெட்டு காரணங்களை சொல்லி தட்டி கழிக்கும் அதிகாரிகள், புறம்போக்கு நிலத்தில் தொகுப்பு வீடுகளை கட்ட ஊராட்சி நிர்வாகத்தால் எப்படி அனுமதி அளித்தார்கள் என தெரியவில்லை.

எல்லாம் கரன்சியின் கைங்கரியங்கள் என்று வேதனையுடன் கூறுகிறார். கோயில் நிர்வாகம் சார்பாக பலமுறை நாமக்கல் மாவட்ட வருவாய் கோட்டாட்சியர் பார்த்திபனை நேரில் சந்தித்து மனு அளித்ததின் விளைவாக கோட்டாட்சியர் 25.10.2024 ம் தேதி உடனடியாக ஆக்கிரமிப்பை அகற்ற வட்டாட்சியருக்கும், எருமைப் பட்டி வட்டார வளர்ச்சி அலுவலருக்கும் அறிக்கை அனுப்பி உள்ளார்.

ஆனால் வட்டாட்சியர் வெங்கடேஸ்வரன் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் சுகிதா ஆகியோர் ஆக்கிரமிப்பு அகற்றுவது எங்கள் வேலை இல்லை என கோட்டாட்சியரின் அறிக்கையை கிடப்பில் போட்டு அலட்சியம் காட்டி வருவது உள்ளபடியே வேதனையாக உள்ளது.

மக்கள் பிரச்சனைகளை தீர்க்க வேண்டிய அதிகாரிகள் அலட்சியப் போக்கால் தான் அரசுக்கு கெட்ட பெயர் ஏற்படுகிறது என்பதை உணராத வரை மக்கள் பிரச்சனை என்றுமே தீர்க்கப்பட போவதில்லை.

மாவட்ட நிர்வாகம் உடனடியாக தலையிட்டு முறையாக ஆய்வு செய்து அரசு புறம்போக்கு நிலத்தை மீட்க வேண்டும் என்பதே அனைவரின் கோரிக்கையாகும். அதேபோல் அரசு நிலத்தை தாரை வார்த்த அரசு அலுவலர்கள் மீதும், கோட்டாட்சியர் உத்தரவிட்டும் ஆக்கிரமிப்பை அகற்றாமல் மெத்தனம் காட்டும் அதிகாரிகள் மீதும், முறைகேடாக பத்திர பதிவு செய்த பதிவாளர் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே அனைவரின் கோரிக்கையாகும்.

● சந்துரு

## நாட்டின் கள நிலவரம்

# புரியாத நிதி அமைச்சர்

# தங்கம் தென்னரசு ?





Flash Back

“பழைய பென்ஷன்‘‘ திட்டத்தை அமல்படுத்துவது தொடர்பான அரசு ஊழியர்களின் கோரிக்கை பல ஆண்டு காலமாக செவிடன் காதில் ஊதிய சங்காகவே உள்ளது.

மக்கள் சேவை செய்யும் அரசு ஊழியர்களுக்கு கொடுக்க நிதி இல்லை, ஆனால் கடலில் பேனா நினைவு சின்னம் வைக்கவும், ஜல்லிக் கட்டு விளையாட்டு நடத்த மைதானம் அமைக்கவும். கலைஞர் சிலை அமைக்கவும், கலைஞர் பெயரில் பல கோடிகளுக்கு நூலகம் அமைக்கவும், கமிஷன் கிடைக்கும் சாலைகள், பாலங்கள் அமைக்கவும், மணி மண்டபங்கள் அமைக்கவும் பணம் இருக்கும் அரசுக்கு உழைக்கும் அரசு ஊழியர்களுக்கு கொடுக்க பணம் இல்லையா என்ற அரசு ஊழியர்களின் கேள்விக்கு முதல்வர் ஸ்டாலின் பதில் அளிக்க கடமை பட்டவர்.

பிளாஷ் பேக் :

2017 ல் செப்டம்பர் 7ம் தேதி, பழைய பென்ஷன் திட்டத்தை அமல்படுத்த வேண்டும் என வலியுருத்திய அரசு ஊழியர்கள், காலவறையற்ற வேலை நிறுத்தம் செய்ய முடிவு செய்தனர்.

அன்றைய முதல்வர் பழனிசாமி வெறும் ”2” மாதம் அவகாசம் கேட்டார். ஆனால் பழனிசாமியின் அவகாசம் ஏற்க மறுத்த அரசு ஊழியர்கள் சங்கங்கள் அன்று காலவரையற்ற வேலை நிறுத்தம், போராட்டம், ஆர்பாட்டம், மறியல் காத்திருப்பு போராட்டம், என பல கட்ட போராட்டங்களை நடத்தி அரசை ஸ்தம்பிக்க செய்தனர்.

அப்போது எதிர் கட்சி தலைவராக இருந்த ஸ்டாலின் அரசியல் ஆதாயம் கருதி, அரசு ஊழியர்களுக்கு ஆதரவாக குரல் கொடுத்தார். 2021 சட்ட சபை தேர்தல் பிரச்சாரத்தின் போது “திமுக ஆட்சிக்கு வந்தால் பழைய பென்ஷன் திட்டம்‘‘ அமல்படுத்தப்படும், அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் கோரிக்கை அனைத்தும் நிறை வேற்றப்படும் என்றார், ஸ்டாலின் வந்தால் விடியல் வரும். அனைவரது கோரிக்கைகள் நிறை வேற்றப்படும் என்ற

எண்ணத்தில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், போக்குவரத்து ஊழியர்கள், மக்கள் என அனைவரும் திமுகவுக்கு வாக்களித்து, ஸ்டாலினும் முதல்வரானார்.

நம்பி வாக்களித்த மக்களுக்கும் அனைவருக்கும் ஏமாற்றமே கிடைத்தது, விலைவாசி உயர்வும், விட்டுவரி, பாதாள சாக்கடை வரி, தண்ணீர்வரி, மின் கட்டணம் உயர்வு என மக்கள் மட்டும் ஏமாறவில்லை, அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், போக்குவரத்து ஊழியர்களும் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

ஸ்டாலின் முதல்வராகி 3 1/2 ஆண்டுகள் ஆனநிலையில் இதுவரை அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், போக்குவரத்து ஊழியர்கள் மக்களின் கோரிக்கைகள் நிறை வேற்றப்படாமல் இருப்பது மட்டுமின்றி சாலை வசதிகள், மழைநிர் வடிகால் வசதிகள், இன்றியும்,போதை ஆசாமிகளால் மக்கள் அனைவரும் பாதுகாப்பின்றி இருப்பது ஸ்டாலின் மிது மக்களுக்கு இருந்த நம்பிக்கையினை இழக்கவே செய்துள்ளது, இருந்தும் 2024 தேர்தலில் மதவாத பாஜக தமிழகத்தில் கால் ஊன்றி விட கூடாது என்ற ஒரே காரணத்திற்காகவும், ஸ்டாலின் தலை குனிந்து விட கூடாது என்ற காரணத்திற்காகவே மக்கள் திமுக கூட்டணியை வெற்றி பெற செய்தனர்.

ஸ்டாலினுக்கு தேவையானதை அனைத்து தேர்தல்களிலும் மக்கள் செய்து விட்டனர், மக்களுக்கான தேவைகளை ஸ்டாலின் பூர்த்தி செய்யாமல் ஏமாற்றுவது என்பது மக்களை ஏமாற்றும் செயல் என்று பார்க்கபட்டாலும், ஸ்டாலினும் அவரை சார்ந்தவர்களும் தங்களை தாங்களே ஏமாற்றிக் கொண்டு இருக்கின்றனர் என்பதே யதார்த்த உண்மை.

இந்நிலையில் தான் கடந்த ஜூன் 24 பட்ஜெட்டில் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு "பழைய பென்ஷன் திட்டத்தை அமல்படுத்துவது அரசின் பரிசீலனையில் உள்ளது... மத்திய அரசு அமைத்துள்ள கமிஷனின் முடிவுமற்றும் அண்டை மாநிலங்களில் அமைக்கப்பட்டுள்ள கமிஷனின் முடிவுகளின் அடிப்படையில் முடிவெடுக்கப்படும்" என தெரிவித்து பல்டி அடித்து தங்களது தேர்தல் வாக்குறுதியினை மறந்து பேசினார், இருந்தும் அரசு ஊழியர்கள் ஸ்டாலின் அரசு செய்யும் என நம்பி



இருந்தனர், பொருமையினை காத்தனர்.

இதற்கிடையில் மத்திய அரசு "ஒருங்கிணைந்த பென்ஷன் திட்டம்" என்ற புதிய திட்டத்தை கடந்த ஆகஸ்ட் 2024 இறுதியில் அறிவித்தது. அதாவது வரும் ஏப்ரல் 2025, 1ம் தேதி முதல் அமலுக்கு வரும் என அறிவித்தது. இதன்படி அரசு ஊழியர்கள் எல்லோருக்கும் பென்ஷன், குடும்ப பென்ஷன் கிடைக்கும் என உறுதிசெய்தது.

மத்திய அரசு கமிஷன் முடிவின் அடிப்படையில் முடிவெடுக்கப்படும் என தெரிவித்த நிதி அமைச்சர், மத்திய அரசின் முடிவு வெளிவந்து "இரண்டு" மாதங்கள் கடந்த நிலையில், இது குறித்து முடிவு எடுக்காமலும், அறிவிக்காமலும் இருப்பது இவரது அறிவிப்பு மற்றும் ஸ்டாலின் தேர்தல் சமயத்தில் கொடுத்த வாக்குறுதியை காற்றில் பறக்கவிடும் படி செய்து அரசு ஊழியர்களை ஏமாற்றம் அடைய செய்துள்ளது.

2017ல் அ.தி.மு.க ஆட்சியில் நடை பெற்ற பல கட்ட போராட்டங்களை மீண்டும் அரசு ஊழியர்கள் செய்ய இருப்பதை, தடுக்கும் விதமாக ஸ்டாலின் அவர்கள் கருனை உள்ளத்துடன் நிறைவேற்றுவதே புத்திசாலித்தனம்.

● ஹாசன்



ஏற்கெனவே திருச்சி மாவட்டம், மாநகர பகுதிகளில் ரவுடிகள் தொல்லை, போதை ஆசாமிகளின் சில்மிஷங்கள், ரேஷன் கடையில் இருந்து அரிசி கடத்தல்காரர்களின் அக்கப்போர், குடி இருப்பு பகுதிகளில் வாடகைக்கு வீடு எடுத்து ஏழைக் கல்லூரி மாணவிகளை வைத்து நடத்தப்படும் விபச்சார கலி ஆட்டங்கள், குடியிருப்பு சாலைகளை ஆக்கிரமித்து வெளி நபர்களின் கார், வேன்கள் போன்ற வாகனங்களை நிறுத்தி பொது இடையுறுகள் (PUBLIC NUISANCE) போன்ற அனைத்து விதமான இடையுறுகளுக்கு மத்தியில் புதிய அச்சுறுத்தல்லாக "ராக்கெட் லாஞ்சர்" ரின் அச்சுறுத்தல்களை பார்க்கும் போது நாட்டில் மக்களின் பாதுகாப்புக்கான அரசாங்கம், உளவுப் பிரிவு, என்.ஐ. ஒ., சி.பி.ஐ, போன்றவை இருக்கிறதா? இல்லையா? என்ற பீதி திருச்சி மாவட்ட மக்களை கவலை அடைய செய்துள்ளது.

கடந்த அக்டோபர் 30ம் தேதி ஜியபுரம் அருகே அந்தநல்லூர் காவிரி ஆற்றங்கரையில் போருக்கு பயன்படுத்தும் "ராக்கெட் லாஞ்சர்" (ராக்கெட் குண்டு) ஒன்றை பார்த்து திடுக்கிட்ட மக்கள் ஜியபுரம் போலிசுக்கு தகவல் தெரிவித்தனர்.

அதனை மீட்டு பாதுகாத்த போலிசார், "இது ராணுவத்தில் டிரைனிங்கின் போது பயன்படுத்தப்படும் டம்மி ராக்கெட் குண்டு பயப்பட தேவையில்லை, இதனை ராணுவ அதிகாரிகளின் ஆய்வுக்கு" அனுப்புவதாக தெரிவித்தனர்.

பிறகு "இந்த ராக்கெட் குண்டு 2ம் உலக போரில் பயன்படுத்தப்பட்டது" என புருடா விட்டுள்ளனர். மேலும் புருடா விட்ட போலிசார் "இந்த ராக்கெட் குண்டு கொரிய போரில் அமெரிக்க ராணுவத்தால் பயன்படுத்தப்பட்டது" என்ற கதையினை கூறியுள்ளனர்.

இந்நிலையில் இந்த 3 கிலோ 600 கிராம் எடையில் 60 சென்டி மீட்டர் ராக்கெட் குண்டை இந்திய ராணுவ ஆராய்ச்சி ஆய்வுக் கூடத்துக்கு அனுப்பாமல் திருச்சி முக்கம்பு அணைப்பகுதியில் ஆற்று மணல் பரப்பில் புதைக்க செய்து வெடிக்க செய்துள்ளனர். ராக்கெட் குண்டு வெடித்த சத்தம் பல கிலோ மீட்டர் தூரத்து வெடித்து அதிர்வை ஏற்படுத்தியது. இதுவரை இவ்வளவு பயங்ரமான சத்தம் எங்கள் வாழ்நாளில் கேட்டதே இல்லை என ஜியபுரம் கிராம மக்கள் தெரிவித்து பீதி அடைந்துள்ளனர்.

கொரியா நாடு எங்கு உள்ளது, அமெரிக்க நாடு எங்கு இருக்கு, அங்கு போரில் பயன்படுத்தப்பட்ட ராக்கெட் குண்டு

# திருச்சியில் "ராக்கெட் லாஞ்சர்" !

## புருடா விடும் போலீஸ்..?





திருச்சி ஜியபுரம் பகுதிக்கு எப்படி வந்தது என்றும் புரியாமல் திகில் அடைந்துள்ளனர்.

இந்நிலையில் முதல் ராக்கெட் குண்டு வெடிக்க வைக்கப்பட்டு சில மாதங்களை கடந்த நிலையில் அதே இடத்தில் 23.11.24 அன்று மீண்டும் இன்னொரு ராக்கெட் குண்டு அதே காவிரி கரையில் கண்ட மக்கள் மீண்டும் அரண்டு போய் போலீசுக்கு தெரிவித்துள்ளனர்.

இந்த இரண்டவது ராக்கெட் குண்டையும் மீட்டு, அதே கொள்ளிடம் ஆற்றில் பாதுகாப்பாக வெடிக்கச் செய்தது திருச்சி மாவட்ட மக்களை அச்சமடையச் செய்து மேலும் பீதியில் ஆழ்த்தியது.

பல ஆண்டுகளுக்கு முன்பு, திருச்சி முக்கம்பு நடுக்கரையில் உள்ள காட்டுப் பகுதியில் ராஜிவ் கொலைக்கு காரணம் என்று கூறப்பட்ட விடுதலைப் புலிகள் தங்கி பயிற்சி பெற்ற போது, அவர்கள் பயன்படுத்திய ராணுவ தளவாடங்களில் இந்த ராக்கெட் குண்டும் ஒன்று, இந்த ராக்கெட் குண்டை அவர்கள் மணலில் புதைத்து வைத்து இருக்கலாம், அதிக நீர் ஒட்டம் காவிரியில் இருந்ததால், அதில் ஏற்பட்ட மணல் அரிப்பின் காரணத்தால், இந்த ராக்கெட் குண்டு தண்ணீரில் அடித்து வரப்பட்டு கரை ஒதுங்கி இருக்கலாம் என்ற கூறப்படுகிறது.

ஆடு, மாடு மேய்க்கும் அப்பாவிகள், காவிரியில் மீன் பிடிக்கும் ஏழைகள், ஆற்றில் குளிக்கும் மக்கள், முக்கம்பு வரும் சுற்றுலா பயணிகள், குணசீலம் கோயிலுக்கு வரும் பக்தர்கள் அனைவருக்கும் எந்தவித பாதிப்பும் இன்றி, இத்தகைய குண்டுகள் இன்னும் எத்தனைமண்ணில் புதைக்கப்பட்டுள்ளது என ஆய்வு செய்து அதனை கண்டுபிடித்து அழிக்க வேண்டும் என்பதே அப்பகுதி மக்களின் வேண்டுகோள்.

கோவை சிலிண்டர் குண்டு வெடிப்பு பிரச்சினையில் பறந்து வந்து தனது கையில் எடுத்து விசாரனை நடத்திய என்.ஐ.ஏ., திருச்சி ஜியபுரம் பகுதியில் ஒரிஜினல் ராக்கெட் குண்டு எடுத்து அதனை வெடிக்கச் செய்த பிறகும் வராமல் இருப்பது மர்மமாகவே உள்ளது மேலும் இந்த ராக்கெட் குண்டை ராணுவ ஆய்வகத்துக்கு அனுப்பாமல், திருச்சி மாவட்ட போலீஸ் வெடிக்கச் செய்தது மக்களின் தூக்கத்தை மேலும் கெடுத்துள்ளது என்பதே யதார்த்த உண்மை.

இந்தியாவில் தடை செய்யப்பட்ட விடுதலை புலி இயக்கத்தின் தலைவர் மறைந்த பிரபாகரனின் பிறந்த நாளை நவம்பர் 26 அன்று சென்னை எம்.ஜி. ஆர் நகர் மார்க்கெட் பகுதியில் தமிழ் இயக்கங்கள் கொண்டாடும் முன்பே திருச்சியில் இரண்டு ராக்கெட் குண்டுகள் செயல் இழக்கச் செய்த சம்பவம் மேலும் சர்ச்சையை கிளப்பியுள்ளது.

**கொரியா நாடு எங்கு உள்ளது, அமெரிக்க நாடு எங்கு இருக்கு, அங்கு போரில் பயன்படுத்தப்பட்ட ராக்கெட் குண்டு திருச்சி ஜியபுரம் பகுதிக்கு எப்படி வந்தது என்று புரியாமல் திகில் அடைந்த பொதுமக்கள்....**

தமிழகத்தில் எது நடந்தாலும் திராவிட மாடல் ஆட்சி நடத்தும் ஸ்டாலின் மீது குற்றம் சுமத்தும் பாஜகவின் தேசிய வாதிகள் உண்மையான ராக்கெட் குண்டை பார்த்தும் அமைதி காப்பது தான் மர்மமாக உள்ளது.

எது எப்படியோ ராக்கெட் லாஞ்சர் விசயத்தில் போலீஸ் புருடா விடுவதாகவே பொதுமக்கள் சந்தேகிக்கின்றனராம்.

● மணிகண்டன்

# கழிவறை ஃகப்... கடுப்பான உதயநிதி...



விழுப்புரம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தை ஆய்வு செய்த உதயநிதி, விவசாயிகளிடம் விற்பனைக்கு உரிய விலையில், சரியான நேரத்தில் கிடைக்கிறா? என்று கேட்டாராம்.

விவசாயிகள் உதயநிதியிடம் பதில் தெரிவிக்கையில் அங்கு கூடியிருந்த பாதுகாப்பு போலிஸ், விவசாயிகள் ஊழல் புகார் தெரிவிக்க போவதாக தவறுதலாக எண்ணி, பதற்றமடைந்து, விவசாயிகளை பேச விடாமல் தடுத்தனராம்.

கடுப்பான ஒரு விவசாயி, தடுத்த போலிசாரையும் மீறி, ஐயா, “ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் கழிப்பறை சுத்தமாக உள்ளது., ஆனால் ...கழுவ தண்ணீர் வசதி தான் இல்லை... என்றாராம்.

கடுப்பான உதயநிதி, நேரில் சென்று கழிப்பறையினை பார்வையிட்டு, ஸ்மெல் செய்து, விற்பனைக் கூடத்தின் செயலாளர் செல்வராஜை கடிந்து. திட்டோ திட்டுனு திட்டினாராம்.

உதயநிதியை வரவேற்க வந்த உடன்பிறப்புகள் இங்கே மட்டுமா ஸ்மெல் அடிக்குது, தலைமை செயலகம், மாவட்ட நிர்வாக அலுவலகங்கள், அரசு அலுவலகங்கள், பள்ளிக்கூடங்கள், முன்சிபல் அலுவலகங்கள், நிதித்துறை, பொதுப்பணித்துறை அலுவலகங்கள். பேருந்து நிலையங்கள் என தமிழகம் முழுக்க உள்ள கழிப்பறைகளில் கப்பு..ஸ்மெல் அடிக்காத இடமே இல்லை, இதுக்காக எல்லா இடத்தையும் போய் டெபுட்டி சி.எம் பார்க்க முடியுமா? இருந்தும் 2026 தேர்தலை கருத்தில் கொண்டு இப்படி நடப்பது(நடிப்பது) ரொம்ப ஓவர்... என்கின்றனராம் ரரக்கள்...



# கோபப்பட்ட அண்ணனை வாழ்த்திய தம்பி...



தி கோட் ஹீரோவான தம்பி, தனது த.வெ.க வின் முதல் மாநில மாநாட்டை நடத்தும் வரை தம்பி மீதான அண்ணனின் பாசம் திராவிட கட்சிகளை பொறாமை கொள்ள செய்தது. யாருடைய கொள்ளிக் கண்ணு...நொள்ளிக் கண்ணு.. பட்டதோ "கூமுட்டை... ஒன்று சாலைக்கு இந்தப்பக்கம் நில்லு... இல்ல அந்தப் பக்கம் நில்லு... நட்ட நடுவுல நின்னா லாரிலே அடிப்பட்டு செத்து போவேனும் சொல்லும் சீமான்,

என் வாழ்கையினை கெடுத்து நடுத்தெருவில் நிற்கவைத்த சீமான், நீ எதில் அடிப்பட்டு சாவே? என சீமானின் எக்ஸ் & எக்ஸ் தெரிவித்த சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைக்க நினைத்த தம்பி, 08.09.2024 அன்று பிறந்த நாள் கொண்டாடிய அண்ணனுக்கு "சகோதரர் சீமான் அவர்களுக்கு எனது இனிய பிறந்தநாள் வாழ்த்தை தெரிவித்துக் கொள்கிறேன்" என முதல் பிறந்தநாள் வாழ்த்தை தெரிவித்து சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைத்தது மட்டுமின்றி தாமும் ஓர் அரசியல் வாதி என நிருபித்துள்ளார் தம்பி.

அதற்க்கு முன்னதாக பாமகவின் தலைவர் டாக்டர் அன்புமனி, வி.சி.க தலைவர் திருமாவளவன் ஆகியோருக்கு பிறந்த நாள் வாழ்த்தை சொன்ன தம்பி, 07.09.2024 அன்று பிறந்தநாளை கொண்டாடிய மக்கள் நீதி மய்யம் நம்மவருக்கு வாழ்த்து தெரிவிக்கா ததற்கு காரணம், நம்மவர் சூரிய கட்சியின் அபிமானி என்பாதலேயே தானாம்.



# நானும் வாரிசு தானே. கனிமொழி பீல்ஸ் ...

நடிகர் விஜயின் என்ட்ரியால் சூரிய வாரிசுக்கான அந்தஸ்து, முக்கியத்துவம் வளர்ந்து அரசு நிகழ்ச்சிகள், கட்சி நிகழ்ச்சிகள் எதுவானாலும் இளஞ்சூரியனை தான் கூப்பிடுகிறார்களாம் குறுநில மன்னர்கள். அப்படி நடக்கும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் குறுநில மன்னர்களின் வாரிசுக்கான முக்கியத்துவம் அதிகரித்து, சூரிய கட்சியின் மா.செ., மாந.செ., ந.செ., ப.செ., மக்கள் பிரதிநிதிகள் என எவருக்கும் கிடைப்பதில்லையாம், இவர்களைப் போலவே இளஞ்சூரியனுக்கு கிடைக்கும் முக்கியத்துவம் சூரியமன்னரின் த ம க் கை ய ா ன க னி மொ ழி க் கு ம் கிடைப்பதில்லையாம்.

கடந்த வருடம் 2023 டிசம்பரில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தூத்துக்குடி மாவட்டதிற்கு விசிட் அடித்த இளஞ்சூரியனை வரவேற்று அழைத்து சென்ற ஜிவனானவரும், கிருஷ்ணனானவரும் தொகுதியின் மக்கள் பிரதிநிதி கனியான வாரிசை புறக்கணித்தனராம், இந்நிலையில் கடந்த மாதம் நடந்த அரசுநிகழ்ச்சி மற்றும் சூரிய கட்சி நிகழ்ச்சியில் கலந்து கொண்ட இளஞ்சுரியன் மற்றும் மாவட்ட குறுநில ராணியான ஜிவனானவரும், கிருஷ்ணனானவரும் கனிக்கான முக்கியத்துவத்தை கொடுக்காமலும் இளஞ்சூரியன் வருகை பற்றி தெரிவிக்காமல் புறக்கணித்தது கனியை வருத்தமடைய செய்துள்ளதாம்.

நானும் சூரிய வாரிசு தானே, சூரிய மாமன்னரான கருணா இருந்திருந்தால் சூரிய அரசவையினர் இப்படி செய்திருப்பார்களா? என்னை விட இளையவரான இளஞ்சூரியன் மட்டும் தான் சூரியவாரிசா? என புளம்பி கொண்டிருக்கிறாராம்...

## உலக அளவில்

# சந்தி சிரிக்கும் அதானி...




## சிக்கிய அரசியல் தலைகள்!

குஜராத் அஹமதாபாத்தில் சாதாரன மனிதனான அதானியின் அண்டர்கிரவுண்ட் வைர வர்த்தகம், நிலக்கரி, எரிவாயு, மின்சாரம், விமான நிலையம், துறைமுகம் என பல் வேறு துறைகளில் இந்திய அரசியல் மாஃபியாகளின் திறை மறைவில் வளர்ந்தது என்பதை விட நேரடி ஆதரவில் பல லட்சம் கோடிளுக்கு வரி ஏய்ப்பு செய்து, சில சொர்ப கோடிகளை எழும்பு துண்டுகளாக அரசியல் வாதிகளுக்கும் அரசு அதிகாரிகளுக்கு லஞ்சமாக கொடுத்து உலக பணக்கார டாப் 5 வரிசையில் இடம் பிடித்தார்.

சுய நலமே குறிக்கோளாக கொண்டு மக்களை ஏய்ச்சி பிழைக்கும் அதிகார வெறி கொண்ட அரசியல் ஜாம்பவான்களின் ஆதரவே அதானி போன்ற கொள்ளையர்களின் வளர்ச்சிக்கு காரணம்.

இன்றைய சூழலில் அதானி போன்ற கிரிமிகளை கட்டுப்படுத்த இந்தியாவில் ஒரு முதுகெலும்பு படைத்த ஒருவர் கூட இல்லையே என்ற மக்களின் ஏக்கத்தினை போக்கும் விதமே அமைந்துள்ளது அமெரிக்க F.B.I யின் நடவடிக்கை.

அமெரிக்க வெளிநாட்டு ஊழல் நடைமுறைச் சட்டத்தின் 1977(எப்.சி.பி.எ) வின் படி, வெளிநாட்டு அரசாங்க அதிகாரிகளுக்கு பணம் லஞ்சமாக செலுத்துவது சட்ட விரோதமானது.

2020-2024ம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் ரூ. 17 ஆயிரம் கோடி (2 பில்லியன் டாலர் அமெரிக்க மதிப்பு) மதிப்பிலான சூரிய ஒளி மின்சாரத்தை வாங்குவதற்கும், அமெரிக்க முதலீடு பெறவும், கடன் தரும் அமெரிக்கர்களிடம் இருந்து கடனாக ரூ. 300 கோடி டாலர்கள் பெற, இந்திய அதிகாரிகளிடம் இருந்து அனுமதி (NOC) பெற, இந்திய அதிகாரிகளுக்கு அமெரிக்க டாலரில் ரூ. 250 கோடி (இந்திய மதிப்பின் ரூ. 2,200 கோடி) யினை அதானி குடும்பம் லஞ்சம் கொடுத்ததாக “ஹிண்டன் பார்க்” என்ற நிதி ஆய்வு நிறுவனம் அதானி குழுமத்தின் போலி நிறுவனங்களின் சட்ட விரோத செயல்களை பற்றி குற்றம் சுமத்தியது.

“ஹிண்டன் பார்க்” குற்றத்திற்கு ஆதாரம்

இருப்பதாக, U.S. SECURITIES AND EXCHANGE COMMISSION (SEC) யு.எஸ். பத்திரங்கள் மற்றும்
பரிமாற்ற கமிஷன் (எஸ்.இ. சி) . அமெரிக்க துணை அட்டர்னி ஜெனரல் லிசா மில்லர் அதானி குழுமத்தின் அதானி கிரீன் நிறுவனம் இந்திய அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்து அமெரிக்கர்களை முதலீடு செய்ய வைத்து
செய்த மிகப்பெரிய மோசடியினை உறுதி செய்தனர்.

இதன் படி அதானி குழுமத்தின் குடுமி "F.B.I" யிடம் சிக்கியது, இதனை தொடர்ந்து 23 உறுப்பினர்கள் கொண்ட நீதிமன்ற குழுவில் அதானி வகையராக்கள் மீது வழக்கு தொடரப்பட்டு, குற்றம் நிறுபிக்கப் பட்டதால் நியூயார்க் நீதிமன்றம் (1) அதானி குழும தலைவர் கவுதம் அதானி; (2) கவுதம் அதானியின் தம்பி மகன் சாகர் அதானி; (3)அதானி கிரின் எனர்ஜி சி.இ.ஒ வினீத் எஸ்.ஜெயின்; (4)அஜீர் பவர் குளோபல் நிறுவன முன்னால் சிஇஒ ரஞ்சித் குப்தா; (5)அஜீர் பவரில் பணியாற்றிய முன்னால் அதிகாரி ருபேஷ் அகர்வால்; (6)சிரில் கேபன்ஸ்; (7)சவுரப் அகர்வால்; (8)தீபக் மஸ்ஹோத்ரா; (9)காலிஸ்தான் ஆதரவு நாடான கனடாவைச் சேர்ந்த 3 ஓய்வூதிய நிதியத்தின் முன்னால் ஊழியர்கள் என அனைவரின் மீதும் கைது வாரண்ட் பிறப்பித்தும், “சர்வதேச சட்ட அமலாக்க” துறைக்கு அனுப்பி அனைவரையும் கைது செய்து ஆஜர் படுத்தும் படி உத்தரவு இட்டுள்ளது, சர்வதேச நாடுகளுக்கு மத்தியில் இந்தியாவுக்கு பெறும் தலை குனிவை ஏற்படுத்தியுள்ளது.

ஏற்கெனவே இந்தியாவுக்காக வெளிநாட்டில் இருந்து நிலக்கரி இறக்குமதி செய்ததில் இல்லாத நிறுவனத்தின் பெயரில் அதானி குழுமம், சந்தைவிலையை விட இரண்டு மடங்கு கூடுதல் விலைக்கு இந்தியாவுக்கு விற்று சட்ட விரோத பணப்பரிவர்த்தனை மற்றும் வரி ஏய்ப்பு செய்த புகாருக்குஆளான போது மோடி, அமித்ஷா, நிர்மலா சீத்தாராமன் ஆகியோர் அதானியை காப்பயற்றும் கேடயமாக முன்நின்றனர்.

அதானி குழுமத்தால் நடத்தப்படும் அதானி எண்டர்பிரைசஸ்: அதானி பவர் நிறுவனம்; அதானிபோர்ட்ஸ்; அதானி கிரீன் நிறுவனம், அம்புஜா சிமென்ட்ஸ்; போன்ற அனைத்து நிறுவனங்கள் மூலம் சட்ட விரோத பணப்பரிவர்த்தனை, வரி ஏய்ப்பு மூலம் அதானி சம்பாரித்து பதுக்கியது பல ஆயிரம் கோடிகளாம்.



இன்று அமெரிக்க நடவடிக்கையால், அதானியின் குட்டு வெளியானதால் பங்களா தேஷ், கென்யா அதானிக்கான ஒப்பந்தங்களுக்கு செக் வைத்துள்ளனர், பிரதமர் மோடியின் வற்புருத்தலால் தான், இலங்கையில் அதானியின் கீரின் எனர்ஜியிடம் ஒப்படைக்கப்பட்டதாம், பின் கதவு வழியாக இலங்கையில் நுழைந்த அதானி குழுமத்தை இலங்கையில் இருந்து வெளியேற்ற படும் என இலங்கையும் தெரிவித்துள்ளது.

இப்படி அதானியின் கோல்மால்கள் உலக அளவில் சந்தி சிரிக்கும் சூழலில், அயல் நாட்டினர் அதானியுடன்னான ஒப்பந்தங்களை ரத்து செய்து விரட்டி அடிக்கும் நிலையில், இந்தியா மட்டும் அதானி போன்ற நிறுவனங்களை பாதுகாப்பது துரதிஸ்டவசமானது.

அதானியின் சர்ச்சைகள் விஸ்வரூபம் எடுத்த நிலையில் தமிழக மின்சாரத்துறை அமைச்சர் செந்தில் பாலாஜி, அவசர துடுக்காக “அதானிக்கும், தமிழக அரசுக்கும் எந்த தொர்பும் இல்லை” என தெரிவித்த நிலையில் அமெரிக்க F.B.I குற்றச்சாட்டில் தமிழகம், சட்டீஸ்கர், ஆந்திரா, ஒடிசா, ராஜஸ்தான், மேற்கு வங்கம் மாநிலங்களுக்கு

தொடர்பு உள்ளது. என கூறி அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கி உள்ளது. சட்டீஸ்கர் மாநிலத்தில் காங்கிரசின் பூபேஷ் பகல் முதல்வராக இருந்த போது ரூ. 25 ஆயிரம் கோடிக்கும், ராஜஸ்தான் மாநிலத்தில் காங்கிரசின் அசோக் கெலாட் முதல்வராக இருந்த போது ரூ. 65 ஆயிரம் கோடியும், மேற்கு வங்க மம்தா மேனர்ஜி அரசு ரூ. 35 ஆயிரம் கோடியும், தமிழக முதல்வர் ஸ்டாலின் ஆட்சியில் ரூ. 4 ஆயிரத்து 500 கோடிக்கு அதானி குழுமம் முதலீடு செய்ததில் லஞ்சம் கொடுக்கப்பட்டதாக நியூயார்க் நீதிமன்றத்தில் நிருபணம் ஆகியுள்ளதாம்.

இந்நிலையில் கடந்த ஜுலை 10 ம் (2024) தேதி, ஸ்டாலினை சென்னை சித்தரஞ்சன் சாலையில் உள்ள அவரது வீட்டில் கவுதம் அதானி ரகசியமாக சந்தித்து பேசியதை பாமகவின் நிறுவனர் ராமதாஸ் பகிரங்கமாக குற்றம் சுமத்தியதை ஸ்டாலின் மறுப்பு தெரிவிக்காமல் மௌனமாக இருப்பது ஸ்டாலின் மீதான தமிழக மக்களின் நம்பிக்கையை சிதைக்கச் செய்துள்ளதாகவே பார்க்கபடுகிறது.

கர்நாடகாவின், காங்கிரஸ் முதல்வர் சித்தா ராமையா அதானியின் ரூ. 1 லட்சம் கோடி முதலீட்டுக்கு ஒப்புக்கொண்டுள்ளார், தெலுங்கனாவின் காங்கிரஸ் முதல்வர் ரேவந்த் ரெட்டி அரசுக்கு அதானி குழுமதிற்கு ரூ.100 கோடி மானியம் வழங்கியுள்ளது. ஆந்திராவின் முன்னால் முதல்வர் ஜெகன் மோகன் மற்றும் அவரது அதிகாரிகள் ரூ. 1,759 கோடியினை லஞ்சமாக பெற்றுள்ளனர் என்று கூறப்படுகிறது.

பாஜகவையும், மோடியையும் அமித்ஷாவையும் அதானி அம்பானி உடனான உறவுகளை குற்றம் சுமத்தி பேசிய காங்கிரஸ் கூட்டணி அரசுகளும் அம்பானியிடம் கை ஏந்தியது “இந்த பூனை(களும்) பால் குடிக்குமா” என மக்களை யோசிக்க செய்துள்ளது.

இந்திய அரசியல் கட்சிகள் அனைத்தும் கூடி கும்பி அடித்து மக்களை ஏமாற்றுவது இன்னும் எத்தனை ஆண்டுகள் இந்த அரங்கேற்றத்தை நடத்துவார்கள் என்பதே மக்களின் கேள்வி.

1975-1977க்கு உட்பட்ட கால கட்டங்களில் எமர்ஜென்சி நெருக்கடி நிலையை பிரகடனம் அறிவிக்க செய்து ஊழலை கட்டுப்படுத்திய இந்தியாவின் இரும்பு பெண்மணி இன்று இல்லையே என மக்கள் இந்திராவை நினைத்து பார்க்கின்றனர்.

● ஹாசன்


தப்பு செய்தவர் திருந்தியாகனும் தவறு செய்தவர் வருந்தியாகனும்

# லட்சியம் வெல்லும்

அரசியல்-சமூக விழிப்புணர்வு மாத இதழ்

## விளம்பர கட்டணம்

| | |
|---|---|
| பின் அட்டை கலர் | ரூ. 20,000 |
| முன் அட்டை உள் பக்கம் கலர் | ரூ. 15,000 |
| பின் அட்டை உள் பக்கம் கலர் | ரூ. 15,000 |
| கருப்பு வெள்ளை முழு பக்கம் | ரூ. 10,000 |
| கருப்பு வெள்ளை அரை பக்கம் | ரூ. 5,000 |

தமிழகம் முழுவதும் வெளிவரும் நமது லட்சியம் வெல்லும் மாத இதழில் விளம்பரம் செய்து பயனடைவீர்!

# சி.எம். அரசு விழாக்களில் "தமிழ்தாய் வாழ்த்து மற்றும் " தேசிய கீதம் " மிஸ்சிங்...? தேர்தல் பதற்றமா ?




*2026 சட்டசபை தேர்தலுக்கு இன்னும் 15 மாதங்கள் இருக்கும் நிலையில் விஜயின் வரவு சூரிய தலைவரை சூடேற்றி வைத்துள்ளது. அதனால் இப்போதிலிருந்தே சூரிய தலைவர் மாவட்டம் வாரியாக, தொகுதி வாரியாக புயல் வேகத்தில் சுற்றுப்பயணம் மேற் கொண்டு அரசு நிகழ்ச்சியை முடிச்சிட்டு, அரசு செலவிலேயே கட்சி நிகழ்ச்சிகளையும் கச்சிதமா முடித்து ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடிக்கிறாராம்.*

கோவையில் தமிழக அரசின் சார்பில் சூரிய தலைவர் பங்கேற்ற "2" நிகழ்ச்சியிலும், சூரிய குடும்பத்தினரின் பதற்றம் அரசு அதிகாரிகளையும் பதற்றம் அடையச் செய்து எந்த குளருபடிகளும் நடந்து விடக்கூடாது என பார்த்து, பார்த்து நடத்திய நிகழ்ச்சியில் ஆரம்பத்தில் பாட வேண்டிய "தமிழ் தாய் வாழ்த்து" பாடல் படாமலும், நிகழ்ச்சி முடிவில் பாட வேண்டிய "தேசிய கீதம்" கூட பாடப்படாமல்" அரசு விழா முடிந்ததாம், தமிழ்... தமிழ்... தமிழென்று தமிழுக்கு தொண்டு செய்து, தமிழுக்கு செம்மொழி அந்தஸ்தை பெற்று கொடுத்த முத்தமிழ் அறிஞர் கருணாநிதியின் வழி வந்த திராவிட மாடல் கலாச்சாரம் தலைவருக்கு புரியவில்லையே என உடன்பிறப்புகளே புலம்புறாங்களாம்...

# நேரே மேலே போய்டுவார்கள்... இருந்தாலும் நேருவுக்கு இம்புட்டு குசும்பு அதிகம்

கடந்த மாதம் திருச்சி அரசு மருத்துவமனையில் ரூ.162 கோடிக்கு நலத்திட்டங்களை தொடங்கி வைத்தார் அமைச்சர் நேரு.



அப்போது புதிய லிப்ட்டை ரிப்பன் வெட்டி நேரு தொடங்கி வைக்கும் முன், அமைச்சருக்கு வேண்டப்பட்ட தினசரி கவர்பார்ட்டி பத்திரிகையாளர்கள் லிப்ட் உள்ளே சென்று, நேரு ரிப்பன் வெட்டுவதை படம் பிடித்தனர். புது லிப்டை நேரு திறந்து வைத்ததும். உடன் இருந்த திமுகவினர், "அண்ணே லிப்ட் பட்டனை அழுத்துங்க அண்ணே" என்றனர், எப்போதுமே நேரு கலந்து கொள்ளும் நிகழ்ச்சியில் கலகலப்பு சிரிப்பிற்கு பஞ்சமே இருக்காது, எப்போதும் போல கலகலப்பாக கூறிய நேரு, நான் லிப்ட் பட்டனை அழுத்தினால் உள்ளே இருக்கும் புகைப்பட காரர்கள் அனைவரும் நேரே மேலே சென்று விடுவார்கள், பரவாயில்லையா..? என இரட்டை அர்த்தத்தில் கூற, ஹீ... ஹீ....னு பல்லை காட்டி கொண்டு கவர் பார்ட்டிகள் லிப்ட்டைவிட்டு வெளியே வந்தனர்.

இரட்டை அர்த்தத்தை புரிந்து கொண்ட சில கவர் பார்ட்டிகள், இருந்தாலும் நேருவுக்கு இம்புட்டு குசும்பு இருக்க கூடாது, எல்லோரும் ஒரு நாள் மேல போயும், இறுதியில் கீழே போய்தான் ஆகவேண்டும், இந்த லாஜிக் கூட இவருக்கு புரியவில்லையே என கமெண்ட அடித்து வெளி ஏறினர். அதுக்கு தான் எப்போதுமே கவர்ரை எதிப்பாத்து கை எந்த கூடாது...



## திராவிட கழகங்களை

# வீழ்த்துமா வெற்றிக்கழகம்...?

தமிழகத்தில் 39 பாராளுமன்ற தொகுதிகளில் 2024 மார்ச் 9ஆம் தேதி நடந்த தேர்தலில் 6,23,33,925 பேர் ஓட்டு போட தகுதி பெற்றிருந்தனர்.

தேர்தல் கமிஷனர் முன்னுக்கு பின் முரண்பாடான தகவல்களை தெரிவித்தாலும் பின்பு அதிகாரப்பூர்வ வாக்கு எண்ணிக்கை, அதாவது வாக்கு எண்ணிக்கை முடிவுற்றவுடன் தேர்தல் ஆணையம் வெளியிட்ட வாக்கு சதவீதத்திற்கு, இரவு சுமார் 7:00 மணிக்கு வெளியேற்ற வாக்கு சதவீதத்திற்கும், இறுதியாக வெளியிட்ட அதிகாரப்பூர்வ வாக்கு சதவீதத்திற்கும் வித்தியாசங்கள் இருந்தும் பல குளறுபடிகள் இடையில் கணக்குப்படி 69.72 சதவீதம் பேர் ஓட்டு போட்டுள்ளனர். அதாவது 4 கோடியே 34 லட்சத்து 58 ஆயிரத்து 875 பேர் ஓட்டுரிமை பயன்படுத்தி ஓட்டு போட்டுள்ளனர்.

இதில் மீதம் 30.28% பேர் அதாவது ஒரு கோடியை 88 லட்சத்து 75 ஆயிரத்து 50 பேர் ஓட்டு போடாமல் புறக்கணித்துள்ளனர்.

ஆனால் இதில் உண்மை என்னவெனில் இவர்கள் அனைவரும் ஊழல் அரசியல்வாதிகளுக்கு ஓட்டு போட விருப்பம் இன்றி புறக்கணித்துள்ளனர் இது அரசியல்வாதிகள் மீதான வெறுப்பை காரணம் என்பதை எதார்த்த உண்மை என தெரிய வருகிறது.

பெரும்பாலானவர்களுக்கு ஓட்டு போடும் உரிமை இருந்தும், வாக்காளர்களுக்கான அடையாள அட்டை இருந்தும், கடந்த தேர்தலில் வாக்கு அளித்தும், 2024 வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லாததாலும், பெயர் விடுபட்டிருந்ததாலும் ஓட்டு போட முடியவில்லை. இது தேர்தல் கமிஷன் மற்றும் உள்ளாட்சித் துறையினரின் கவனக்குறைவு என சர்வேயின் போது பலரும் குற்றம் சாட்டினார்.

இந்நிலையில் 2026 சட்டசபைக்கான தேர்தலில், 2025 ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் தேதி ஓட்டு போடும் தகுதி ஏற்படுத்தும் நாளாக கொண்டு, தமிழகத்தில் மொத்தம் ஆறு கோடியே 27 லட்சத்து 30 ஆயிரத்து 588 வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளனர். கடந்த தேர்தல் வாக்காளர்களின் எண்ணிக்கையை 3,966,63 வாக்காளர்கள் கூடுதலாக உள்ளனர்.

வருகின்ற 2025 ஜனவரி 1ஆம் தேதி கணக்கின்படி

18 முதல் 19 வயதுக்கு உட்பட்ட முதல் முறை வாக்காளர்களின் எண்ணிக்கை நடிகர் விஜய்

ஸ்டைலில் சொன்னால் விசில் அடிச்சான் குஞ்சுகள் எண்ணிக்கை 6.51 லட்சம் பேர்



ஓட்டு போட தகுதி உடையவர்கள்.

20 முதல் 29 வயதுக்கு உட்பட்ட வாக்காளர்கள் ஒரு கோடியே ஆறு லட்சத்து எட்டாயிரத்து 886 பேர் ஓட்டு போடும் தகுதி உடையவர்கள்.

30 முதல் 39 வயதுக்குட்பட்ட மிடில் ஏஜ் வாக்காளர்கள் ஒரு கோடியை 29 லட்சத்து 28 ஆயிரத்து 362 பேர் ஓட்டு போடும் தகுதி உடையவர்கள்.

40 முதல் 49 வயதுக்கு உட்பட்ட வாக்காளர்கள் ஒரு கோடி 36 லட்சத்து 44 ஆயிரத்து 160 பேர் ஓட்டு போடும் தகுதி உடையவர்கள்.

50 முதல் 59 வயதுக்கு உட்பட்ட வாக்காளர்கள் ஒரு கோடியை 12 லட்சத்து 54 ஆயிரத்து 851 பேர் ஓட்டு போட தகுதி உடையவர்கள்.

60 முதல் 69 வயதுக்கு உட்பட்ட வாக்காளர்கள் சீனியர் சிட்டிசன் 75 லட்சத்து 68 ஆயிரத்து 521 பேர் ஓட்டு போடும் தகுதி உடையவர்கள்.

70 முதல் 79 வயதுக்குட்பட்ட வாக்காளர்கள் 42 லட்சத்து 79 ஆயிரத்து 861 பேர் ஓட்டு போடும் தகுதி உடையவர்கள்.

80 மற்றும் அதற்கு மேற்பட்ட மிக மிக மூத்த குடிமகன்கள் 17 லட்சத்து 94 ஆயிரத்து 460 பேர் ஓட்டு போடட்டும் தகுதியுள்ளனர் ஓட்டு போடும் உரிமை உள்ளவர்களாக உள்ளனர். இதில் மூன்றாம் பாலினத்தவர்கள்,

ஓட்டு போடும் உரிமை உள்ளவர்களாக உள்ளனர்.

இந்நிலையில் மாவட்டம், மாநகரம், நகரம், வார்டு வாரியாக நடிகர் விஜயின் கட்சிக்கான கட்டமைப்பு வலுபெறாத அளவில் இதற்கான மக்களின் செல்வாக்கு ஈர்ப்புத்தன்மை, 2026 தேர்தலில் அவருக்கான மக்கள் மத்தியில் ஆதரவு எப்படி உள்ளது என அறிந்து கொள்ள நமது லட்சியம் வெல்லும் டீம் தமிழகம் முழுவதும் ஒரு அலசல் சர்வேயினை நடத்தி மக்கள் மனதில் உள்ளதை வெளிப்படுத்தி உள்ளோம்.

வாக்காளர்களிடம் கேட்கப்பட்ட கேள்விகள்......

2026 சட்டசபை தேர்தலில் விஜய்க்கு ஆதரவு அளிப்பீர்களா? என்ற கேள்விக்கு, இளம் வயதினரான ஆண்களின் 73 சதவீதம் பேரும், இளம் பெண்களின் 80 சதவீதம் பேரும் விஜய்க்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். திமுகவிக்கு ஆதரவு அளிப்பீர்களா என்ற கேள்விக்கு அதிர்ப்தியாளர்களின் எண்ணிக்கை 22 சதவீதத்திற்கும் மேல் உள்ளது. விஜயுடன் அதிமுக கூட்டணியை விரும்புகிறீர்களா? என்ற கேள்விக்கு இல்லை என்றே ஏகோபித்தவர்களிடம் பதில் உள்ளது.

விஜய் யாருடன் கூட்டணி வைக்க விரும்புகிறீர்கள்? என்ற கேள்விக்கு பாஜக, அதிமுக தவிர பாமக கூட்டணிக்கு 25 சதவீதம் பெரு, விசிக கூட்டணிக்கு 10% பேரும், தேமுதிக கூட்டணிக்கு 22 சதவீதம் பேரும், கம்யூனிஸ்ட்க்கு 10 சதவீதம் பேரும் ஆதரவு தெரிவித்துள்ளனர். கூட்டணி தேர்தலை சந்திக்க ஆதரவு தெரிவித்தவர்களில் பெரும்பாலானவர்கள் தேர்தலுக்கான கூட்டணி விரும்புகிறோம். கூட்டணி ஆட்சியை விரும்பவில்லை.

கூட்டணி ஆட்சி என்பது குரங்கு கையில் கிடைத்த பூமாலை போன்றது. ஆளாளுக்கு நாட்டாமை செய்ய தொடங்கி ஈகோ பிரச்சனையால் நல்லாட்சிக்கான பார்முலா சீர்குலையும் என்பது ஒட்டுமொத்த இளைஞர்களின் எண்ணமாக உள்ளது.

விஜய்யின் அரசியல் வரவு புதிது, அரசியல் மற்றும் அரசை கையாளும் திறமை இருக்குமா? என்ற கேள்விக்கு...

ஆரசை வழிநடத்துவது ஐஏஎஸ், ஐபிஎஸ்



அ தி கா ரி க ளி ன் வ ழி கா ட் டு த லி ன் ப டி செயல்பட்டால் நல்லாட்சி மலரும். சட்டசபைக்கு பட்ஜெட் என்பது அரசு அதிகாரிகளால் தான் தயாரிக்கப்படுகிறது, அவர்கள் தயாரித்து கொடுத்ததை தான் இன்று அரசியல்வாதிகள் படித்து தங்கள் தயாரிப்பதாக சொல்கிறார்கள்.

அரசு அதிகாரிகளை சுதந்திரமாக செயல்பட விட்டாலே தமிழகத்தில் நிர்வாகம், சட்டம் ஒழுங்கு பிரச்சனைகள் சீராக இருக்கும் இதை விஜய் செய்வார். அவருக்கான வாய்ப்பு கொடுப்பதில் தப்பு இல்லை என தெளிவாக தெரிவிக்கின்றனர். விஜயை விரும்பும் காரணம் என்ன? என்ற கேள்விக்கு மக்களை ஈர்க்கும் ஆளுமை சக்திகளான ஜெயலலிதா, கருணாநிதி தற்போது இல்லை.

தமிழக அரசியலில் இன்றைய சூழலில் மக்களை ஈர்க்கும் சக்தி என்பது எவரிடமும் இல்லை. இந்த சக்தி விஜயிடம் உள்ளது. அவர் மக்களுக்கு நல்லது செய்வார் என்ற நம்பிக்கை, குறிப்பாக இளம் வாக்காளர்கள் மற்றும் மீடியம் வயது வாக்காளர்களிடம் உள்ளது.

இன்றைய சூழலில் திமுகவுக்கு சாதகமாக இருக்கும் ஆயுதம் ஒன்றரை கோடி குடும்ப பெண்களுக்கான மாதாந்திர உரிமைத்தொகை ஆயிரம், பெண்களுக்கான இலவச பஸ் பாஸ், அரசு பள்ளிகளில் படித்து கல்லூரியில் சேர்ந்து படிக்கும் மாணவ மாணவிகளுக்கு படிப்பு உதவித்தொகை ஆகியவை ஸ்ட்ராங்காக உள்ளது.

திமுகவுக்கு பாதகமாக என்று பார்த்தால் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் கோரிக்கை நிறைவேற்றப்படாமல் இருப்பது, விலைவாசி உயர்வு, ரேஷன் கடையில் தரமான பொருட்கள் கிடைக்காதது, குறிப்பாக ஒரிஜினல் துவரம் பருப்பு கிடைக்காமல் இருப்பது.

வீட்டு வரி உயர்வு, தண்ணீர் வரி உயர்வு, மின் கட்டணம் உயர்வு, மக்களின் தேவைகளை வார்டு வாரியாக பூர்த்தி செய்யாத கவுன்சிலர்கள், அடாவடி வசூல் செய்யும் பெண் கவுன்சிலர்களின் கணவன்கள் போன்ற விஷயங்களால் அதிருப்தியில் மக்கள் உள்ளதா தெரிகிறது.

அதேபோல் விஜய் கட்சியை ஆரம்பித்து இன்று வரை வார்டு வாரியாக நிர்வாகிகள் அமைக்கப்படாததாலும், பூத் கமிட்டி அமைக்கப்படாமலும், கட்சியின் கட்டமைப்பு வலுவாக இல்லாத போதும்.

பூத்கமிட்டி என்றால் என்ன என்ற புரிந்துணர்வு கூட தொண்டர்களிடம் இல்லாத போதும், மாவட்டம்,மாநகரம் நகரம் புறநகர் பகுதியில் நியமிக்கப்பட்டவர்கள் பெயர் அளவுக்கு இருப்பதனால், பெரிய அறிமுகம் இல்லாததாலும், விஜய் கட்சியில் பேஸ்மெண்ட் கொஞ்சம் வீக் ஆகி இருப்பது எதார்த்த உண்மை.

விஜய் என்ற தனிநபருக்கான ஆதரவு பெருகி இருப்பது ஆச்சரியத்தை ஏற்படுத்தினாலும், மக்களின் எண்ணங்களை கூட்டி கழித்து பார்த்தால் வரவேற்கும் 2026 சட்டசபை தேர்தலில் திமுக, அதிமுக பாஜகவினரின் ஓட்டுகள் கணிசமாக தாவெக கட்சிக்கு செல்லும் என்பதே லட்சியம் கள ஆய்வில் தெளிவாகத் தெரிகிறது.

என்ன செய்யப் போகிறார் விஜய் சந்தர்ப்பத்தை பயன்படுத்துவாரா? இல்லை நலுவ விடுவாரா? என்பது காலத்தின் கையில் உள்ளது.

இவை அனைத்தையும் முறியடித்து வெற்றியினை தக்க வைத்துக்கொள்ள உதயநிதி ஸ்டாலின் வகுக்கும் வியூகங்கள் என்ன என்பதை பொறுத்தே அரசியலில் அடுத்த நகர்வுகள் இருக்கும் என்பதையும் தவிர்க்க முடியாது.

இரண்டு மாதங்களாக மக்களின் மனநிலையை அறிந்து நியாயமாகவே இந்த கட்டுரை வெளிவந்துள்ளது.

● சின்னத்துரை

Owned and published by S.Sathaivam from 5/185, Thiruvalarchipatti, Airport, Trichy-620007, and Printed by B.Louis at Friends Printers, VVLP Stores, Palakarai, Trichy-620 001. Editor: S.Sathasivam.



# கிரேஸ் முதியோர் இல்லம்

**(REG NO : 60 / 2017)**



எண்.8, சீனிவாசா நகர், 3வது கிராஸ், திருவானைக்கோவில்,
ஸ்ரீரங்கம் மெயின் ரோடு, A.R.கல்யாண மஹால் அருகில்,
திருச்சி -620 005. Cell: 9688975038. www.graceoldagehome.in

திருச்சி திருவானைக்கோவில் பகுதியில் கிரேஸ் முதியோர் இல்லம் இயங்கி வருகிறது. கருணையோடும் மரியாதையோடும் முதியவர்களை பராமரித்து வருவது மட்டுமல்லாமல் ஆண்கள் பெண்கள் என தனித்தனி இடவசதியும் செய்து கொடுக்கின்றனர். முற்றிலும் சைவ உணவே வழங்கி கண்ணியமாக முதியவர்களை பாதுகாத்து வருகின்றனர். ஒவ்வொரு மாதமும் மருத்துவர்கள் நேரடியாக வந்து உடல் பரிசோதனை செய்கின்றனர். திருச்சி திருவானைக்கோவில், சீனிவாசா நகர், மூன்றாவது கிராஸில் இயங்கி வரும் கிரேஸ் முதியோர் இல்லத்தின் நிறுவனர் திருமதி.எமிலி ஜெசிந்தா அவர்களின் பணியை பலரும் பாராட்டி வருகின்றனர்.










# VIJAYA

**PACKAGED DRINKING WATER**



## Vijaya Industries

178/1A, New Bye Pass Road, Tiruvannamalai,
Cell: 9486438386, 7598025770, 9597799932

Latchiyam Vellum (Tamil Monthly) RNI. Regd.No.TNTAM 2015/63921. Postal Regd. No:TRY/094/2021-2023


# உங்கள் ஊரில் தமிழ் நாடு அரசு அனுமதியுடன் வாகன புகை பரிசோதனை மையம் அமைத்து மாதம் ரூ. 50,000/- முதல் வருமானம் சம்பாதிக்க நிலையான வருமானம் பெறுக

## SCRANTA INDIA

**Start Your own Business With Government Approved For Vehicle Pollution Testing Certificate Issues**




## ABOUT US

15 வருடங்களுக்கு மேல் இந்த துறையில் 100 கும் மேற்பட்ட முகவர்களுடன் தமிழ் நாடு முழுவதும் விநியோகம் செய்து வருகிறோம்.

Sivakumar Arumugam
WhatsApp business account

## WHY CHOOSE US

- நிலையான அமைப்பு
- விரைவான சேவை
- தரமான தயாரிப்பு இயந்திரங்கள்

தமிழ் நாட்டின் வகான எண்ணிக்கை 2.75 கோடி.
தேவையான புகை பரிசோதனை மையம் குறைந்த பட்சம் 2500 நிலையம்.
இருப்பது 550 மட்டுமே.
சிந்திப்பீர் லாபகரமான தொழிலில் இணைவீர்

7200007527

#1/53,Q, Sripuram Colony 1St Street
Ayra Square ,St, Thomas Mount,Chennai -600016